விலை: 50.00
பக்கங்கள் : 12
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 173 வள்ளுவர் ஆண்டு 2054 வைகாசி 27 சனிக்கிழமை (10.06.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே



பூசகர்களிடையே முரண்பாடு

## வீரமாகாளி அம்மன் ஆலய கொடியேற்றத்தில் தடங்கல்



(யாழ்ப்பாணம்)

- நீதிமன்ற கட்டளையையடுத்து மாலை கொடியேற்றம் இடம்பெற்றது.
- ஆலய மஹோற்சவத்தில் தடை ஏற் படுத்துபவர்களைக் கைது செய்ய நீதிமன்றம் உத்தரவு.

யாழ்ப்பாணம் அருள்மிகு ஸ்ரீ வீரமாகாளி அம்மன் தேவஸ்தானத் 11

தரம் 9க்கு உட்பட்ட மாணவர்களுக்கு

## வெள்ளி, ஞாயிறு தினங்களில் தனியார் வகுப்புக்கள் நடத்தத் தடை

ஜூலை முதல் யாழில் புதிய நடைமுறை



(யாழ்ப்பாணம்)

ஜூலை முதலாம் திகதி முதல் யாழ்ப்பாண மாவட்டத்தில் தரம் ஒன்பதிற்குட்பட்ட மாண வர்களுக்கு ஞாயிற்றுக்கிழமைகளிலும் வெள் ளிக்கிழமைகளிலும் தனியார் வகுப்புக்களை நடத்துவதை நிறுத்த தீர்மானம் எடுக் கப்பட்டது. 11

# நல்லிணக்கத்தை அமுல்படுத்த சட்டங்களை தயாரியுங்கள்

## அதிகாரிகளுக்கு ஜனாதிபதி பணிப்புரை



(கொழும்பு)

- காணிப் பிரச்சினைகளை தீர்க்க உடன் நடவடிக்கை எடுக்கத் தீர்மானம்.
- அரசியல் கைதிகளை விடுவிக்க அறிக்கை சமர்ப்பிக்குமாறு அறிவுறுத்தல்

நல்லிணக்கத்திற்கான செயற் றிட்டத்தை அமுல்படுத்துவது தொடர்பான சட்டங்கள் தயாரிப் பதைத் துரிதப்படுத்துமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சம்பந்தப்பட்ட தரப்பினர்களுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

நல்லிணக்கத்திற்கான செயற் திட்டம் தொடர்பாக ஜனாதிபதி அலுவலகத்தில்விசேட கலந்துரை யாடல் ஒன்று இடம்பெற்றது.

இங்கு சட்ட வரைவு, நிறுவன நடவடிக்கைகள், காணிப் பிரச்சி னைகள், கைதிகளை விடுதலை செய்தல், அதிகாரப் பரவலாக் கம் ஆகிய 05 பிரதான பகுதி களின் கீழ் நடைமுறைப்படுத் தப்பட்ட வேலைத் திட்டங் களின் முன்னேற்றம் தொடர் பாக மீளாய்வு செய்யப்பட்டது.

உண்மை மற்றும் நல்லி ணக்க ஆணைக்குழுவின் பரிந் துரைகளை அமுல்படுத்துதல், தேசிய காணி சபையொன்றை நிறுவுதல் மற்றும் தேசிய காணி கொள்கையை உரு வாக்குதல், காணா 11

## யாழ்.- கிளிநொச்சி மாவட்டங்களில் காணிகளை விடுவிக்க தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மற்றும் கிளி நொச்சி மாவட்டங்களில் வன வளப் பாதுகாப்பு மற்றும் வன ஜீவராசிகள் போன்ற திணைக் களங்களால் அடையாளப்படுத் தப்பட்டுள்ள காணிகளில் கணிசமானவற்றை விரைவில் விடுவிப்பதற்கு தீர்மானிக்கப் பட்டுள்ளது.

கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஏற் பாட்டில் நேற்று முன்தினம் பாராளுமன்றக் கட்டிடத் தொகு தியில் இடம்பெற்ற வனவளப் பாது காப்பு மற்றும் வனஜீவ ராசிகள் பாதுகாப்பு அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி மற் றும் குறித்த அமைச்சு அதிகாரி களுடனான சந்திப் பின்போதே மேற் 11

## முல்லை காட்டுப்பகுதியில் குடும்பஸ்தரின் சடலம் மீட்பு

யானை தாக்கி உயிரிழந்திருக்கலாம்!

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மல்லாவி வட காட்டுப் பகுதியில் குடும் பஸ்தர் ஒருவரின் சடலம் நேற்று மீட்கப்பட்டுள்ளது.

இதில் இராசையா கணேஸ் குமார் (வயது-52) என்ற மூன்று பிள்ளைகளின் தந்தையே சடல மாக மீட்கப்பட்டவராவார்.

குறித்த நபர் இரவு வேளை யானை தாக்கி உயிரி ழந்திருக்கலாம் என்று 11

## இலங்கை மீள்வதற்கு அவகாசம் தேவை

ஆசிய அபிவிருத்தி வங்கி பிரதிநிதிகளிடம் சஜித்



(கொழும்பு)

இலங்கை மீள்வதற்கு கால அவகாசம் தேவை. முறை 11

## கவுணாவத்தை வேள்வி இன்று

(கருகம்பனை)

கருகம்பனை கவுணா வத்தை நரசிங்க வைரவராலய வருடாந்த வேள்விப் பொங்கல் உற்சவம் இன்று இடம்பெற வுள்ளது.

அதிகாலை 4 மணியள வில் விசேட பூஜை யுடன் இடம்பெற்று 12

நாட்டின் அனைத்துப் பிரஜைகளின்

## கருத்து சுதந்திரமே ஜனநாயகத்துக்கு முக்கியம்



இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் தெரிவிப்பு

06ஆம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிளிநொச்சி மாவட்ட பேருந்து நிலைய சிற்றுண்டிச்சாலையினை குத்தகை வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல்

கடந்த 04.06.2023 ஞாயிற்றுக்கிழமை வலம்புரிப்பத்திரிகையின் 15 ஆம் பக்கத்தில் பிரசுரமான மேற்குறித்த விளம்பரத்தின் இரண்டாவது பந்தியில் கேள்விப்படிவங்களை பெற்றுக்கொள்ளும் நேரத்தினை மு.ப. 09.00 மணியிலிருந்து பிற்பகல் 03.00 மணிவரைக்கும் என திருத்தி வாசிக்கவும்.

தலைவர்,
பெறுகைக்குழு
வீதிப்பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை,
வட மாகாணம்.

(C-6708)

## 31ம் நாள் அந்தியேட்டி அழைப்பு



தோற்றம் 17 - 12 - 1967

மறைவு 12 - 05 - 2023

கடந்த 12.05.2023 அன்று இறைவனடி சேர்ந்த

### அமரர் ஐயாத்துரை பத்மநாதன்
### (அப்பர் அண்ணா)

அவர்களின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் மதியபோசன நிகழ்வும் நாளை (11.06.2023) ஞாயிற்றுக்கிழமை மதியம் 12 மணி முதல் மாலை 4.00 மணி வரை Thomas Wall Centre, 52 Benhill Ave, Sutton SMI 4DP எனும் முகவரியில் நடைபெறும்.

அன்றைய தினம் (11.06.2023) தாயகத்தில் சிவபுர வீதி, வல்வெட்டித்துறையில் உள்ள அன்னாரது இல்லத்திலும் மதியபோசன நிகழ்வு நடைபெறும்.


இந்நிகழ்வில் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்போடு அழைக்கின்றோம்.

சிவபுர வீதி,
வல்வெட்டித்துறை.

(C-6706)

தகவல் - குடும்பத்தினர்
077 046 2414

## கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 26.11.1951

மறைவு 08.06.2023

எமது நண்பன் சதீஸ் அவர்களின் அன்புத் தந்தையார்


### சோமசுந்தரம் பரமானந்தம்

அவர்கள் காலமான செய்தியறிந்து ஆழ்ந்த துயரடைகின்றோம். அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

யாழ்.இந்துக்கல்லூரி
2002 உயர்தரப்பிரிவு நண்பர்கள்.

(15914)

## மரண அறிவித்தல்



### வல்லிபுரம் சிவசுப்ரமணியம்

இமையாணன் மேற்கு உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் கொழும்பை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட வல்லிபுரம் சிவசுப்ரமணியம் அவர்கள் 09.06.2023 நேற்று வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் - நாகம்மா தம்பதியரின் அன்புப் புதல்வனும் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் பத்மாவதியின் அன்பு கணவரும் காலஞ்சென்ற பரமேஸ்வரி, செல்வராசா ஆகியோரின் அன்பு சகோதரரும் காலஞ்சென்ற சோதிமலர், விமலநாதன்(பிரான்ஸ்), சுரேஸ் (பிரான்ஸ்), காலஞ்சென்ற ரமேஸ், ஜீவமலர் (பிரான்ஸ்), கோணேஸ்வரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ராசாத்தி, கலாவதி, தயாளன், ரேனுகா ஆகியோரின் அன்பு மாமனாரும் லிதுர்சன், நிறுயன், லக்சிகா, தேனுயன், வர்னிகா, துவிஸ்கா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை 11.06.2023 ஞாயிற்றுக் கிழமை இமையாணன் மேற்கு உடுப்பிட்டி இல் உள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக 11.00 மணியளவில் வல்லை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.


077 175 2611
076 965 1996

தகவல்:-
குடும்பத்தினர்

(15913)

## மரண அறிவித்தல்

தோற்றம் 06 . 11 . 1948



மறைவு 08 . 06 . 2023

### செல்லர் கிருஷ்ணபிள்ளை (பெரியாம்பி)

அம்பனை தெல்லிப்பளையைப் பிறப்பிடமாகவும் உரும்பிராயை வதிவிடமாகவும் கொண்ட செல்லர் கிருஷ்ணபிள்ளை (பெரியாம்பி) அவர்கள் 08.06.2023 வியாழக்கிழமை மாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லர் - மீனாட்சி தம்பதியரின் அன்பு மகனும் இராசையா - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் ராஜலட்சுமியின் அன்புக் கணவரும் வினோஜா, லோஜன் ஆகியோரின் தகப்பனாரும் நாகேஸ்வரி, காலஞ்சென்ற பவளரத்தினம் மற்றும் நடராசா (சின்னத்தம்பி), இரத்தினம், சபாரத்தினம் (இத்தாலி), செல்வராணி (சுவிஸ்), வசந்தராணி (ஜேர்மனி), யோகராணி (டென்மார்க்), காலஞ்சென்ற வரதன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஸ்டாலினின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.06.2023) ஞாயிற்றுக் கிழமை காலை 10.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் உரும்பிராய் இருளல் மயானத்தில் தகனம் செய்யப் படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

உரும்பிராய் வடக்கு,
உரும்பிராய்.

(15909)

தகவல்:- குடும்பத்தினர்
076 150 3547, 076 617 3417

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாள்கள் தயாரிப்பில் ஈடுபட்டவர்கள் விளக்கமறியலில்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் காங்கேசன் துறை பகுதியில் வாள் செய்து கொண்டிருந்த குற்றச்சாட்டில் கைதான ஒருவர் 14 நாட்களுக்கு விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்ட மல்லாகம் நீதவான் நீதிமன்றம் மற்றொருவரை பிணையில் விடுவித்தது.

இது குறித்து மேலும் தெரிய வருவதாவது, யாழ்ப்பாணம் காங்கேசன்துறை பகுதியில் வாள் செய்து கொண்டிருந்த நான்கு பேரை காங்கேசன் துறை பொலிஸார் நேற்று முன்தினம் கைது செய்து விசாரணை முன்னெடுத்தனர். பொலிஸார் விசாரணையின் பின்னர் இருவரை விடுவித்து விட்டு இருவரை மாத்திரம் மல்லாகம் நீதவான் நீதி மன்றில் முற்படுத்தினர்.

இதன்போது ஒருவர் பிணையில் விடுவிக்கப்பட்டதுடன் மற்றொருவரை 14 நாட்களுக்கு விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டது.(4-33)

## யாழில் கடந்த ஆண்டு
# தவறான முடிவெடுத்து
# 175 பேர் உயிர் மாய்ப்பு

(யாழ்ப்பாணம்)

**யாழ்ப்பாணத்தில் கடந்த ஆண்டு 175 இற்கு மேற்பட்டோர் விபரித முடிவெடுத்து உயிர்மாய்த்துள்ளனர் என வைத்திய கலாநிதி.சிவதாஸ் தெரிவித்தார்.**




யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் நேற்று காலை இடம்பெற்ற தனியார் கல்வி நிறுவனங்களுடனான கலந்துரையாடலில் இவர் இதனை தெரிவித்தார். மேலும் தெரிவிக்கையில்,

இளந்தலைமுறையினருக்கு பொழுது போக்குகளும் ஓய்வுள்ள நேரத்தை கழிப்பதற்கான வழிமுறைகள் இன்மையே தற்போது இளைஞர்கள் மத்தியில் போதைப்பொருள் பாவனை அதிகரிப்புக்கு காரணம்.

முன்னைய காலத்தில் சமூகம் மிகுந்த பலமாக இருந்தாலும் தற்போது காணப்படும் சமூகம் மிகவும் பலவீனமானது. பாடசாலையுடனும் குடும்பத்துடனும் நல்ல இணைப்பிலுள்ள மாணவர்கள் எவ்விதமான பிறழ்வான நடத்தைகளுக்குள்ளும் அகப்படுவதில்லை.

யாழ்ப்பாணத்தில் கடந்த ஆண்டு 175 இற்கு மேற்பட்ட தற்கொலைகள் இடம்பெற்றுள்ளது. யாழ்ப்பாணத்தில் வெளிநாட்டிலிருந்து வரும் பணமும் பெருமளவான நடுத்தரவளவு குடும்பங்களின் பேராசைத் தன்மையுமே பெரும்பாலான பிரச்சினைக்கு வழிவகுக்கின்றது எனவும் சுட்டிக்காட்டினார். (4)

## சிங்கப்பூர் ஜனாதிபதித் தேர்தலில் யாழைச் சேர்ந்தவர் போட்டி



(யாழ்ப்பாணம்)

சிங்கப்பூரில் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் இடம்பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் யாழ்ப்பாணத்தை பூர்வீகமாகக் கொண்ட சிங்கப்பூர் மூத்த அமைச்சர் தர்மன் சண்முகரத்தினம் களம் இறங்கவுள்ளார்.

யாழ்ப்பாணம் ஊரெழு மற்றும் உரும்பிராய்ப் பகுதியை தாய் தந்தையர் பிறப்படமாகக் கொண்ட சிங்கப்பூரின் மூத்த அமைச்சரான தர்மன் சண்முகரத்தினம் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதற்காக மக்கள் செயல் கட்சியில் இருந்து இராஜினாமா செய்வதுடன் தனது அமைச்சர் பதவியிலிருந்தும் விலகவுள்ளார். (4-104)

## மரதன், சைக்கிள் ஓட்ட போட்டிகள்

(கரணவாய்)

தமிழர் விடுதலை கூட்டணியின் முன்னாள் தலைவர் சிவசிதம்பரத்தின் நூற்றாண்டு ஜனன தினத்தை முன்னிட்டு எதிர்வரும் ஜூன் 17,18 ஆம் திகதிகளில் காலை 6 மணியளவில் சாமியன் அரசடி சந்தியில் இருந்து சைக்கிள் ஓட்ட போட்டி மற்றும் 22 km கொண்ட அரை மரதன் போட்டி நடைபெற உள்ளது. போட்டியில் பங்குபற்ற விரும்புவோர் மேலதிக தகவல்களுக்காக 077 870 2089 / 077 349 8141 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். (4-60)

## நல்லூர் மூத்தவிநாயகர் ஆலய மஹோற்சவம்

(யாழ்பாணம்)

நல்லூர் மூத்தவிநாயகர் தேவஸ்தானத்தின் வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 17 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் இடம்பெறவுள்ளன.

எதிர்வரும் 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்குத் தேர்த் திருவிழாவும் மறுநாள் 26 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8 மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும் மாலை கொடி இறக்கமும் நடைபெறவுள்ளது. (4)

## உலகளவில் வருடாந்தம்
# பாதுகாப்பற்ற உணவுகளால் நான்கு லட்சம் பேர் மரணம்
## பொதுச் சுகாதார பரிசோதகர் தகவல்

(சாவகச்சேரி)

உலகளாவிய ரீதியாக உணவுப் பாதுகாப்பினை முறையாக கடைப்பிடிக்காமையால் வருடாந்தம் 4 இலட்சம் பேர் மரணிக்கின்றார்கள் என சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையைச் சேர்ந்த மந்துவில் பிரிவு பொது சுகாதாரப் பரிசோதகர் ஜென்சன் றொனால்ட் தெரிவித்துள்ளார்.

உலகளாவிய ரீதியாக உலக உணவுப் பாதுகாப்பு தினம் நேற்றுமுன்தினம் புதன்கிழமை கொண்டாடப்பட்ட நிலையில் தென்மராட்சி - மந்துவில் பகுதியில் முன்னெடுக்கப்பட்ட விசேட கருத்தமர்வு நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்படி தெரிவித்தார். இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

உணவின் தரத்தை மேம்படுத்தி உயிர்களைப் பாதுகாப்பதே இந்த ஆண்டுக்கான உலக உணவுப் பாதுகாப்பு தினத்தின் கருப்பொருளாக அமைகின்றது. எனவே உணவு தயாரிக்கும் மற்றும் கையாளுமிடங்களில் பொருத்தமான உணவுப் பாதுகாப்பு முறைகளைக் கையாள்வதை நாம் ஒரு போதும் தவறக்கூடாது.

உணவுப் பாதுகாப்பை சரியாகக் கடைப்பிடிக்காது உணவுத் தயாரிப்பு மற்றும் கையாளுதலில் ஈடுபடுவதால் உலகளாவிய ரீதியில் வருடந்தோறும் அறுநூறு மில்லியன் பேர் பாதிக்கப்படுகிறார்கள். இதன் தீவிர பாதிப்பினால் வருடந்தோறும் நான்கு இலட்சத்து இருபதாயிரம் பேர் அநியாயமாக இறந்து போவதாக புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

உணவின் மூலம் பரவும் நோய்களை உரிய சுகாதார கையாளுகை முறைகளூடாகத் தடுக்க முடியும். ஒவ்வாமையை ஏற்படுத்தக்கூடிய பதார்த்தங்களை உணவுடன் சேர்க்காமல் தவிர்த்தல், பீடைகளைக் கட்டுப்படுத்தல், சிறப்பான கழிவு முகாமைத்துவத்தை மேற்கொள்ளுதல் ஆகிய விடயங்களை பின்பற்றுவதன் ஊடாக உணவினைப் பாதுகாத்து, அதன் மூலம் பரவும் நோய்களைத் தவிர்க்க முடியும்.

உணவு கையாளும் நிலையங்களை, உணவு எடுத்துச் செல்லும் வாகனங்களைப் பதிவு செய்யும் 2019 ஆம் ஆண்டு உணவு ஒழுங்கு விதிக்கமைவாக பதிவுகளை மேற்கொள்ள நடவடிக்கையெடுக்கும் போது உணவின் தரமும் உயர்வடைய வாய்ப்பாகின்றது.

உணவு உயிருடன் நேரடியாகத் தொடர்புபட்டது. ஆகையால் அதன் தரத்தைப்பேணி எமது உயிர்களைப் பாதுகாக்க முன்வரவேண்டும் என மேலும் அவர் தெரிவித்தார். (4-36)

## தேசிய கலை இலக்கிய போட்டிகளுக்கான விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

கலாசார அலுவல்கள்திணைக்களத்தினால் வருடாந்தம் நடத்தப்படும் தேசிய கலை இலக்கியப் போட்டிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

பாலர் பிரிவு, சிறுவர் பிரிவு, கனிஷ்ட பிரிவு, சிரேஷ்ட பிரிவு, அதி சிரேஷ்ட பிரிவு, திறந்த பிரிவு (19 வயதிற்குமேல்) ஆகிய பிரிவுகளின் கீழ் நடத்தப்படவுள்ள இப்போட்டிகளில் கதை கூறுதல், சிறுவர் கதை, கிராமிய பாடல் இசைத்தல், கையெழுத்துப் போட்டி, கிராமிய கதை ஆக்கம், கவிதை ஆக்கம், பாடல்நயத்தல், இலக்கிய விமர்சனம், பாடல் எழுதுதல், சிறுகதை, நாடகப்பிரதியாக்கம், கவி இசைத்தல், நாட்டார் கலை ஆய்வுக் கட்டுரை முதலான போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

இப்போட்டிகள் தொடர்பான விண்ணப்பங்களை அலுவலக நேரத்தில் வடமராட்சி வடக்கு பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் பெற்றுக் கொள்ளலாம் என்பதுடன் ஆர்வமுடையவர்கள் 2023.07.14 ஆம் திகதிக்கு முன்னர் ஆக்கங்களை சமர்ப்பித்து மேற்படி போட்டிகளில் பங்குபற்றுமாறு பிரதேச செயலாளர் ஆழ்வாப்பிள்ளை சிறி அறிவித்துள்ளார். (4)


## அரியாலை ஸ்ரீ கலைமகள் சனசமூக நிலைய ஆண்டு விழா

(யாழ்ப்பாணம்)

அரியாலை ஸ்ரீ கலைமகள் சனசமூக நிலைய 77 ஆவது ஆண்டு நிறைவு விழாவின் முதல் நாள் நிகழ்வு நேற்று ஆரம்பமாகிவிட்டதுடன், இரண்டாம் நாள் நிகழ்வு இன்று காலை 6 மணிக்கு நிலைய முன்றலில் சனசமூக நிலைய தலைவர் இ.மதிகரன் தலைமையிலும் மூன்றாம் நாள் நிகழ்வு நாளை காலை 6 மணிக்கு சனசமூக நிலைய உப செயலாளர் நா.குமணதாசன் தலைமையில் நடைபெறும். (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இங்கிலாந்து டெஸ்ட் அணியில் மீண்டும் மொயின் அலி




எட்ஜ்பஸ்டன் மற்றும் லோர்ட்ஸில் நடைபெறும் முதல் இரண்டு ஆஷஸ் டெஸ்ட் போட்டிகளுக்கான இங்கிலாந்து அணியில் மொயீன் அலி இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளார்.

இங்கிலாந்து அணியின் சுழற்பந்து வீச்சாளர் ஜாக் லீச்சிற்கு முதுகில் ஏற்பட்ட காயத்தை அடுத்து மொயீன் அலி மீண்டும் அணியில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளார்.

2021 ஆம் ஆண்டுக்கு பின்னர் எந்தவொரு டெஸ்ட் போட்டிகளிலும் விளையாடாத 35 வயதான சகல துறை வீரரான மொயீன் அலி, தற்போது மீண்டும் அணிக்குள் உள்வாங்கப்பட்டுள்ளார்.

அணித் தலைவர் பென் ஸ்டோக்ஸ், தலைமை பயிற்சியாளர் பிரண்டன் மெக்கலம் மற்றும் இங்கிலாந்து கிரிக்கெட் சபையின் நிறைவேற்று பணிப்பாளருடனான கலந்துரையாடலை அடுத்து அணிக்குள் உள்வாங்கப்பட்டுள்ளார். (4)

# அமெரிக்க கால்பந்து கிளப்பில் இணைந்தார் லியனல் மெஸ்ஸி



ஆர்ஜெண்டினாவின் தலை சிறந்த கால்பந்து வீரர் மெஸ்ஸி. 35 வயதான இவர் இளம் வயதில் இருந்தே பார்சிலோனா அணிக்காக விளையாடி வந்தார்.

கடந்த 2021 ஆம் ஆண்டில் பார்சிலோனா அணியுடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக பி.எஸ்.ஜி அணிக்கு மாறினார். கடந்த இரண்டு வருடங்களாக பி.எஸ்.ஜி அணிக்கு விளையாடிய அவர் கடந்த வாரத்துடன் அந்த அணியில் இருந்து விடைபெற்றார்.

இதற்கிடையே, மெஸ்ஸி மீண்டும் பார்சிலோனா அணிக்கு திரும்புவாரா அல்லது சவுதி அரேபியா கிளப் அணிக்காக விளையாடுவாரா என்ற கேள்வி எழுந்தது.

மேலும், பார்சிலோனா அணி மீண்டும் அவரை ஒப்பந்தம் செய்ய தயாராக இருந்தது.

இந்நிலையில், யாரும் எதிர்பாராத வகையில் மெஸ்ஸி அமெரிக்காவின் இன்டர் மியாமி அணியில் இணைந்துள்ளார்.(4)

# உதைபந்தாட்ட போட்டி

யாழ்.உதைபந்தாட்ட லீக் சுற்று கிண்ணப் போட்டியில் இன்று சனிக்கிழமை மாலை 3.30 மணிக்கு சென். மேரிஸ் விளையாட்டு கழகமும் ஆனை யூனியன் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன.

அரியாலையில் உள்ள யாழ்.உதைபந்தாட்ட பயிற்சி நிலையத்தில் குறித்த போட்டி நடைபெறவுள்ளது என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (4)

# உலகக் கிண்ண தகுதிகாண் குழாத்தில் மெத்யூஸ் நீக்கம்

ஸிம்பாப்வேயில் அடுத்த வாரம் ஆரம்பமாகவுள்ள 10 நாடுகளுக்கு இடையிலான ஐ.சி.சி உலகக் கிண்ண தகுதிகாண் சுற்றுக்கு 15 வீரர்கள் அடங்கிய இலங்கை குழாம் பெயரிடப்பட்டுள்ளது.

இந்தத் தகுதிகாண் சுற்றை முன்னிட்டு இலங்கை அணியைப் பலப்படுத்தும் பொருட்டு சிரேஷ்ட வீரர்களான திமுத் கருணாரட்ன, ஏஞ்சலோ மெத்யூஸ் ஆகிய இருவரும் ஆப்கானிஸ்தானுக்கு எதிரான தொடரில் இணைக்கப்பட்டிருந்தனர்.

அவர்களில் திமுத் கருணாரட்ன 2 அரைச் சதங்களைக் குவித்து துடுப்பாட்ட ஆற்றலை வெளிப்படுத்தி உலகக் கிண்ண தகுதிகாண் சுற்றுக்கான குழாத்தில் இடம்பிடித்துக் கொண்டார்.

ஆனால், ஏஞ்சலோ மெத்யூஸ், துடுப்பாட்டத்தில் பிரகாசிக்கத் தவறியதால் உலகக் கிண்ண தகுதிகாண் சுற்றுக்கான இலங்கை குழாத்தில் இடம் பிடிக்கத் தவறினார். (4)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2849

கபிலா




ஹாலிட்




விசால்




விஜி




மிருஷாலி




கவிந்தன்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தற்கொலை செய்துகொள்வதற்கு வட கொரியாவில் தடை விதிப்பு

(பியாங்யாங்)

"தற்கொலை சோசலிசத்திற்கு எதிரான தேசத்துரோகம். எனவே வட கொரியாவில் தற்கொலை செய்துக்கொள்ளத் தடை விதிக்கப்படுகிறது" என அந்நாட்டு ஜனாதிபதி கிம் ஜாங் உன் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

வடகொரியாவில் ஜனாதிபதி கிம் ஜாங் உன் தலைமையிலான ஆட்சி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

இந்நிலையில் அங்கு அடிக்கடி ஏவுகணை சோதனைகள் உட்பட்ட பல்வேறு சோதனை நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன.



இதனால் சில உலக நாடுகள் வடகொரியாவுக்கு பொருளாதாரத்தடை விதித்திருக்கிறது. அதனால் அந்த நாட்டில் பஞ்சம் ஏற்பட்டு மக்கள் சிரமத்தில் வாழ்ந்து வருவதாகவும் கூறப்படுகிறது.

இந்த நிலையில், வட கொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன் இந்த உத்தரவை பிறப்பித்திருப்பதாக செய்திகள் வெளியாகியிருக்கின்றன.

"வட கொரியாவில் மக்கள் பல்வேறு சிரமங்களை சந்தித்து வருகின்றனர். வட கொரியாவில் கடந்த ஆண்டை விட பட்டினி சாவுகள் மூன்று மடங்காக அதிகரித்திருக்கின்றன. கடந்தாண்டை காட்டிலும் இந்த ஆண்டு தற்கொலை செய்வோரின் எண்ணிக்கை 40 சதவிகிதம் அதிகரித்திருக்கிறமை குறிப்பிடத்தக்கது. (நி)

## ஆப்கான்

# பள்ளிவாசலில் குண்டு வெடிப்பு 11 பேர் பலி 30 பேர் காயம்

(காபூல்)

ஆப்கானிஸ்தானில் - பதாக்ஷான் மாகாணத்தின் பைஸாபாத் மாவட்டத்தில் பள்ளிவாசல் ஒன்றில் நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதலில் 11 பேர் உயிரிழந்ததுடன் 30 பேர் காயமடைந்துள்ளனர்.

இந்த சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது. ஐ.எஸ்.ஐ.எஸ் இயக்கத்தினால் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக ஆப்கானிஸ்தான் உள்துறை அமைச்சு தெரிவித்துள்ளது. (நி)

# ரஷ்ய குடியிருப்புக் கட்டடத்தின் மீது ஆளில்லா விமானம் மோதியது



(மொஸ்கோ)

ரஷ்யாவிலுள்ள குடியிருப்புக் கட்டடமொன்றின் மீது ஆளில்லா விமான மொன்று (ட்ரோன்) நேற்று மோதியுள்ளது.

வொரோனேஹ் பிராந்தியத்தில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாக அப்பிராந்திய ஆளுநர் தெரிவித்துள்ளார்.

சுமார் இருவர் இச் சம்பவத்தில் காயமடைந்துள்ளனர் என அவர் தெரிவித்துள்ளார்.

இச்சம்பவத்தில் பல வீடுகள் சேதமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (நி)

# மசூதியில் விளைந்த விலை உயர்ந்த மாம்பழம்



(டில்லி)

மேற்கு வங்கத்தில் உள்ள மசூதி ஒன்றில் ஜப்பானில் மட்டுமே வளரக் கூடிய மாமரம் இருக்கிறது. இம்மாமரத்தின் மூலம் இந்த ஆண்டில் மசூதி நிர்வாகம் லட்சக்கணக்கில் வருமானம் ஈட்டி வருகிறது.

தற்போது மாம்பழ சீஸன். இதனால் எங்கும் மாம்ப ழுங்களாக காணப்படுகிறது. மேற்கு வங்க மாநிலம் பிர்பம் மாவட்டத்தில் உள்ள துப்ரா ஜ்பூர் என்ற இடத்தில் இருக்கும் மசூதியின் வளாகத்தில் அபூர்வமான மாமரம் ஒன்று இருக்கிறது.

இம் மாமரக்கன்றை மசூதிக்குக் கொண்டு வந்த ஒருவர், கடந்த மூன்று ஆண்டுகளுக்கு முன்பு நட்டுள்ளார்.

இப்போது அந்த மாமரத்தில் காய்கள் காய்த்து பழங்கள் கிடைக்க ஆரம்பித்துள்ளது. இந்த மாம்பழங்கள் மிகவும் அபூர்வமாக இருக்கின்றன. ஆரம்பத்தில் எல்லோரும் இதைச் சாதாரண மாமரமாக த்தான் பார்த்தனர்.

பழம் பழுக்க ஆரம்பித்த பிறகுதான், அதன் நிறம் எரியும் நெருப்பைப் போன்று இருந்தது. உடனே அது எந்த ரகம் என்று விசாரித்த போது ஜப்பானில் மட்டுமே விளையக்கூடிய உலகிலேயே அதிக விலையுள்ள மாம்பழம் என்று தெரிய வந்தது.

இதை மியாசாகி மாம்பழம் என்றும், சூரியனின் முட்டை கள் என்றும் இந்த மாம் பழத்தை அழைக்கின்றனர்.

இது குறித்த செய்தி அப்பகுதி முழுவதும் பரவியது. உடனே ஏராளமான மக்கள் வந்து பார்த்துவிட்டுச் சென்றனர். அத்தோடு ஒவ்வொருவரும் தங்களுக்கு இந்த மாம்பழம் வேண்டும் என்று கேட்டனர்.

உடனே அந்த மாம்பழத்தை மசூதி நிர்வாகம் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் ஏலம் விட ஆரம்பித்துள்ளது. நேற்றுமுன்தினம் ஏலம் விட்டபோது ஒரு மாம் பழத்தை உள்ளூர் வியாபாரி 10,600 (இந்திய மதிப்பில்) ரூபாய்க்கு ஏலம் எடுத்துள்ளார்.

இந்த மாம்பழ ஏலத்தின் மூலம் மசூதிக்கு லட்சக் கணக்கில் வருமானம் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (நி)

# இராசிபலன்

10.06.2023
வைகாசி 27, சனிக்கிழமை
சப்தமி பிற்பகல் 6.10 மணிவரை

சதயம் முன்னிரவு 7.46 மணிவரை
சுபநேரம் -2.52-4.22 மணிவரை
இராகுகாலம்-8.52-10.22 மணிவரை

சந்திராஷ்டமம்-
பூசம்-ஆயிலியம்

**வளவன்**

**மேஷம்** நீங்கள் எதிர்பாராத ஒருவர் உங்களை தொலைபேசியில் தொடர்பு கொள்ளலாம், செய்தொழில் மேன்மையுண்டு, எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள்.

**கடகம்** ஆரோக்கியத்தில் அக்கறை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், மனதில் இனம்புரியாத சஞ்சலங்கள் தோன்றி மறையும்.

**துலாம்** எதிர்பார்ப்புக்கள் நிறை வேறும் வாய்ப்புண்டு, சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காணும் நாள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**மகரம்** தொலைபேசி வழியில் ஆச்சரியம் தரும் செய்திகள் வந்து சேரலாம், சொன்ன சொல்லைக் காப்பாற்றி மகிழ்வீர்கள், முன்கோபமும் அலைச்சலும் ஏற்படலாம்.

**ரிஷபம்** தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**சிம்மம்** புதிய நபர்களின் அறிமும் கிடைக்கும், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேரலாம், எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள்.

**விருச்சிகம்** வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், வழிபாட்டில் நம்பிக்கை வைப்பீர்கள், வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள்.

**கும்பம்** புதிய பொறுப்புக்களால் வேலைச்சுமை அதிகரிக்கலாம், வழிபாட்டால் திருப்தி காண வேண்டிய நாள், உடல் நலனில் கவனம் தேவை, போசன சுகமுண்டு.

**மிதுனம்** உங்களின் கடின உழைப்பை மற்றவர்கள் வியப்பாக பார்ப்பர், எதிலும் அவசரத்தைத் தவிர்ப்பது நல்லது, எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர்.

**கன்னி** குடும்பத்தில் உங்களின் செல்வாக்கு மேலோங்கும் நாள், எதிர்பார்த்த சலுகைகள் இயல்பாக கிடைக்கும் வாய்ப்புண்டு, அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள்.

**தனுசு** உடன் பிறப்புக்கள் அனுசரணையாக நடந்து கொள்வீர், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம் பெறலாம், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள்.

**மீனம்** வழிபாட்டால் வளர்ச்சி கூடும் நாள், தூர தேசத்திலிருந்து ஆச்சரியம் தரும் செய்திகள் வந்து சேரலாம், உறவினர் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது.

அறிவும், ஒழுக்கமும் [illegible] இரு சக்கரங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவசாயிகளுக்கு வழங்கப்படும் உரங்களுக்கு மேலும் நிவாரணங்களை வழங்க நடவடிக்கை

## விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர



(கொழும்பு)

விவசாயிகளுக்கு வழங்கப்படும் உரங்களுக்கு மேலும் நிவாரணங்களை வழங்குவதற்கு நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளதாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

அதனடிப்படையில் அடுத்த வாரம்முதல்யூரியா உரம்மூடையொன்றை 9,000 ரூபாவுக்கு வழங்கத் தீர்மானித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் தற்போது 19,500 ரூபாவாக விற்பனை செய்யப்படும் எம்.வி.பி உரம் மூட்டையொன்றின் விலையினை 4500 ரூபாவினால் குறைத்து 15,000 ரூபாவுக்கு வழங்குவ தற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார். (நி)

# புதிய கடவுச்சீட்டு முறையால் புகைப்பட ஸ்டுடியோக்களுக்கு அநீதி

(கொழும்பு)

கடவுச்சீட்டை பெற்றுக்கொள்ளும் புதிய முறைமையானது மக்களுக்கு இலகுவான முறை என்றாலும் பழைய முறைமையின் கீழ் புகைப்படங்களை எடுப்பது இல்லாமல் ஆக்கப்பட்டதால், தமக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளதாக அகில இலங்கை நிபுணத்துவ புகைப்படத் தொகுப்பு உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

7 ஆயிரம் தொழில் நிபுணத்துவ புகைப்பட நிலைய உரிமையாளர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் குழுவொன்று அண்மையில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவை சந்தித்து புதிய கடவுச்சீட்டு முறையின் கீழ் புகைப்பட நிலையங்களில் இருந்து புகைப்படம் பெறும் முறை இல்லாமல் போனதாகவும் அதனால் தாங்கள் பெரும் நஷ்டத்தை சந்தித்துள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

அங்கு கூடிய விரைவில் பாராளுமன்றத்தில் இந்த விடயம் தொடர்பில் கவனம் செலுத்துவதாக எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு உறுதியளித்துள்ளார். (நி)

# சாதாரண தர பரீட்சை பெறுபேறுகளை விரைவில் வெளியிட நடவடிக்கை

## பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரிவிப்பு

(கொழும்பு)

கல்விப் பொதுத்தராதர சாதாரணதர பரீட்சை பெறுபேறுகளை விரைவில் வெளியிட எதிர்பார்த்துள்ளோம். அத்துடன் பரீட்சைகளின் போது முறைகேடாகவும் விடையளிக்கும் போது மோசடியாகவும் செயற்பட்ட மாணவர்கள் தொடர்பான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்தார்.

பரீட்சை திணைக்களத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

கல்விப் பொதுத் தராதர சாதாரணதர பரீட்சைகள் வெற்றிகரமாக நிறைவடைந்துள்ளன.

சில பாடசாலைகளில் முறைகேடான வகையில் நடந்து கொண்ட மாணவ குழுக்கள் தொடர்பில் தகவல்கள் கிடைத்துள்ளன.

இது தொடர்பான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. விசாரணைகளின் அடிப்படையில் குறித்த மாணவர்களுக்கு எதிராக உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

இவற்றுடன் வெளிநபர்கள் தொடர்புபட்டிருந்தால், அவர்கள் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்குமாறு அந்தந்த பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. பரீட்சைகள் கட்டளை சட்டத்தின் கீழ் இவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

வெகுவிரைவில் சாதாரண தர பரீட்சை பெறுபேறுகளை வெளியிட எதிர்பார்த்துள்ளோம்.

தற்போது உயர்தர பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டு பணிகளும் இடம் பெற்றுவருவதால், ஏற்கனவே திட்டமிட்டபடி சாதாரண பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டு பணிகளை ஆரம்பிக்க முடியாத நிலைமை காணப்படுகிறது.

எவ்வாறிருப்பினும்விரைவில் விடைத்தாள் மதிப்பீட்டு பணிகளை ஆரம்பித்து, பெறுபேறுகளை வெளியிட வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது என அவர் தெரிவித்தார். (நி)

# கருத்துச் சுதந்திரமே ஜனநாயகத்திற்கு முக்கியமான அம்சம் - ஜூலிசங்



(கொழும்பு)

கருத்து வெளிப்பாட்டு சுதந்திரத்தை இலங்கை பாதுகாக்க வேண்டும் என அமெரிக்கா வேண்டுகோள் விடுத்துள்ளது.

இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலிசங் தனது டுவிட்டர் பதிவில் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை ஒவ்வொரு பிரஜைக்கும் கருத்து சுதந்திரத்திற்குள்ள உரிமையே ஜனநாயகத்திற்கான முக்கியமான அம்சம் எனவும் தெரிவித்துள்ள அவர் இலங்கையை மீளக்கட்டியெழுப்பும் ஸ்திரமானதாக்கும் இந்த அடிப்படை உரிமை பாதுகாக்கப்படுதல் அவசியம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (நி)

# கொழும்பு-அவிசாவளை வீதியில் விபத்து

## 22 பேர் மருத்துவமனையில்

(கொழும்பு)

கொழும்பு-அவிசாவளை வீதியில் எம்புல்கமவில் இடம்பெற்ற விபத்தில் 22 பேர் காயமடைந்துள்ளனர்.

குறித்த விபத்து நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்றுள்ளது.

கொழும்பில் இருந்து அவிசாவளை நோக்கி பயணித்த லொறி ஒன்றும் அக்கரப்பற்றில் இருந்து கொழும்பு நோக்கி பயணித்த இ.போ.ச பேருந்தும் மோதி விபத்துக்குள்ளானது.

காயமடைந்தவர்கள் நவகமுவ மற்றும் ஹோமாகம மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்ற நிலையில் சம்பவம் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதாகவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். (நி)

## கொச்சிக்கடை புனித அந்தோனியார்

# ஆலயத்திற்குள் நுழைந்த நபரால் பரபரப்பு

(கொழும்பு)

கொழும்பு கொச்சிக்கடை புனித அந்தோனியார் தேவாலயத்திற்குள் நுழைய முயன்ற நபரால் அப்பகுதியில் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

தேவாலயத்தில் ஆராதனைகள் இடம்பெற்றுக் கொண்டிருந்தவேளை தேவாலயத்துக்குள் நுழைய முயன்ற இம்தியாஸ் என்ற நபர் சந்தேகத்தின் அடிப்படையில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு மட்டக்குளி பிரதேசத்தைச் சேர்ந்த 46 வயதுடைய நபரே சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் எதிர்வரும் 13ஆம் திகதி கொழும்பு கொச்சிக்கடை புனித அந்தோனியார் ஆலயத்தின் திருவிழா இடம்பெறவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (நி)

# மீண்டும் அதிக விலைக்கு விற்கப்படும் முட்டை

(கொழும்பு)

இலங்கையில் பல வியாபாரிகள் தொடர்ந்தும் நிர்ணயிக்கப்பட்ட விலைக்கு மேல் முட்டைகளை விற்பனை செய்வதாக நுகர்வோர் முறைப்பாடு தெரிவிக்கின்றனர்.

நாட்டில் சமீப காலமாக பல வியாபாரிகள் ஒரு முட்டை 47 ரூபா தொடக்கம் 60 ரூபா வரை அதிக விலைக்கு விற்பனை செய்யப்படுவதாக நுகர்வோர் தெரிவிக்கின்றனர்.

அதிக விலைக்கு முட்டை விற்கும் வியாபாரிகளை கண்டறிய சோதனை நடத்தப்படும் என்றும், அவர்களுக்கு எதிராக 1 லட்சம் ரூபா அபராதம் விதிக்கப்படும் என்றும் நுகர்வோர் ஆணையம் தெரிவித்துள்ளது.

நாட்டில் முட்டைக்கு அதிக கிராக்கி நிலவுவதால் வியாபாரிகள் அதிக விலைக்கு முட்டைகளை விற்பனை செய்வதாக அகில இலங்கை முட்டை உற்பத்தியாளர்கள் சங்கத்தின் தலைவர் சரத் ரத்நாயக்க தெரிவித்துள்ளார். (நி)

# இடைத்தேர்தல் அவசியம்-மல்கம் ரஞ்சித்

(கொழும்பு)

மக்கள் புதிய அரசாங்கத்தை தெரிவுசெய்வதற்காக இடைத்தேர்தலொன்று தேவை என கர்தினால் மல்கம் ரஞ்சித் தெரிவித்துள்ளார்.

கட்டானவில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கருத்துதெரிவித்துள்ள அவர் தேசத்தை நேசிக்காத ஆட்சியாளர்கள் பதவியிலிருக்கும் போது நாட்டை அபிவிருத்தி செய்ய முடியாது என்பதால் இடைத் தேர்தல் அவசியம் என அவர் தெரிவித்துள்ளார்.

நாட்டின் எதிர்காலம் குறித்து சிந்திக்காமல் தாங்கள் எப்படி தப்பிபிழைத்து வாழ்வது என்பது குறித்து சிந்திப்பவர்கள் மூலம் உங்களிற்கு எதிர்காலம் இல்லை.

நாங்கள் தேர்தலிற்கு அழைப்பு விடுக்கின்றோம், இதன் மூலம் 18 வயதிற்கு மேற்பட்டவர்கள் அனைவரும் நாட்டின் எதிர்காலத்தை தீர்மானிக்கலாம் என கர்தினால் மல்கம் ரஞ்சித் தெரிவித்துள்ளார்.

மக்கள் உரிமைகளை ஒடுக்குவதற்கான சட்டமூலங்களை கொண்டுவரப்படுவதையே



நாங்கள் இன்று பார்க்கின்றோம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொன்சேகா இராஜினாமா



மன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா, தேசிய பாதுகாப்புக்கான துறைசார் மேற்பார்வைக் குழுவின் உறுப்பினர் பதவியில் இருந்து இராஜினாமா செய்துள்ளார்.

இது தொடர்பில் பாராளுமன்றத்துக்கு நேற்று அறிவித்த பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ, அந்த வெற்றிடத்துக்கு பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் தெரிவு செய்யப்பட்டுள்ளார் என்றும் அறிவித்தார். (நி)

(கொழும்பு)
ஐக்கிய மக்கள் சக்தியின் கம்பஹா மாவட்ட பாராளு

# புற்றுநோய் செல்களை அழிக்கும் மருந்து இலங்கையில் அறிமுகம்

(கொழும்பு)

**கொழும்பு பல்கலைக்கழகத்தின் உயிர்வேதியியல், மூலக்கூறு உயிரியல் தொழில்நுட்ப நிறுவகத்தின் பேராசிரியர் சமிரா ஆர்.சமரகோன் உள்ளிட்ட ஆய்வுக் குழுவினர், மனித உடலில் ஏற்படக்கூடிய புற்றுநோய் செல்களை அழிக்கக்கூடிய ஊட்டச் சத்து மருந்தை அண்மையில் அறிமுகப்படுத்தினர்.**

12 ஆண்டுகளுக்கும் மேலாக அறிவியல் ஆராய்ச்சியை வெற்றிகரமாக நடத்தியதன் மூலம் தனியார் நிறுவனத்துடன் இணைந்து இந்த சத்து மருந்தை தயாரிக்க முடிந்தது என்று பேராசிரியர் தெரிவித்தார்.

இந்த ஊட்டச்சத்து மருந்தை புற்று நோயாளிகள் மற்றும் புற்று நோயில் இருந்து மீண்டு வரும் நோயாளிகளும் பெறலாம்.

இது இயற்கை ஊட்டச்சத்து மருந்து என்றும், மார்பகப்புற்று நோய், நுரையீரல் புற்றுநோய், மலக்குடல் புற்றுநோய், உள் புற்றுநோய் என சுமார் 15 வகையான புற்றுநோய் செல்களை அழிக்க வல்லது.

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார மந்த நிலைக்கு தீர்வாக இந்நாட்டில் உள்ள பல்வேறு துறைகளில் உள்ள விஞ்ஞானிகளின் மற்றும் நிபுணர்களின் ஆதரவைப் பெற்று நாட்டை அபிவிருத்தியை நோக்கி அழைத்துச் செல்வது முக்கியம் என பேராசிரியர் தெரிவித்தார். (நி)






**யாழ்ப்பாண இராச்சியத்தின் கடைசித் தமிழ் மன்னன்**
**2 ஆம் சங்கிலியனின் 404 ஆவது நினைவுதினம்**

இடம்: சங்கிலி மன்னன் சிலையடி, முத்திரைச்சந்தி
காலம்: 11.06.2023 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி
சிரார்த்தக்கிரியை மாலை 2-3 மணிவரை கீரிமலையில் இடம்பெறும்

**சைவப் பெருமக்கள் அணிதிரண்டு வாரீர்**
**சைவம் காத்த மன்னனுக்கு அஞ்சலி செய்வோம்.**



செயலாளர்,
சங்கிலி மன்னன்
நினைவுதினக் குழு.



(C-6686)


## வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை
## பண்டத்தரிப்பு கிராம உப அலுவலகம் மாதகல்
## ஆதன உரிமைமாற்ற அறிவித்தல்

வட்டாரம் :- 16
ஆதன இல:- 76
வீதி:- சங்கானை வீதி 2 ஆம் ஒழுங்கை
கிராம சேவையாளர் பிரிவு :- J/144
வலி.தென்மேற்கு பிரதேச செயலாளர் பிரிவு.

எமது இடாப்பில் மேற் குறிப்பிடப்பட்ட இலக்கத்தில் அமைந்துள்ள இவ் ஆதனமானது. உறுதிப்படி வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், வலிகாமம் மேற்குப் பகுதி பண்டத்தரிப்புக் கோவிற்பற்று மாகியப்பிட்டி இறை: "ஆத்தி ஒ்ல்லை" நில பரப்பு. 1.1/2 ம் ஒன்றரைக்கும் எல்லைகள்
கிழக்கு : நடராசா அருளம்மாவுக்கும் கதிரவேலு முருகையாவுக்குமுரிய ஆதனங்கள்
வடக்கு : வழிவாய்க்கால்
மேற்கு : மாரிமுத்து மகள் மாலினிகட்குரிய ஆதனங்கள்
தெற்கு : ஒழுங்கை
இவ்வெல்லைகட்குட்பட்ட நிலமடங்கலுமதனைச் சேர்ந்தவைகளனைத்தும் இன்னும் வடகிழக்குப் பக்கமாக அமைந்துள்ள கிணற்றிலுமதனைச் சேர்தவைகளிலும் இதற்குரிய பங்கும் வழிவாய்க்கால் பாவிப்புரித்தும். இவ் ஆதனமானது உறுதி இலக்கம் 8722/24.04.2020 (திரு.இ.சபேசன்). அவர்கள் முகதாவில் எழுதப்பட்ட இவ்ஆதனம் தொல்புரம் மேற்கு சுழிபுரத்தைச் சேர்ந்த மாணிக்கம் கைம்பெண் பூமணி ஆகியவர்களால் அவ்வூரைச் சேர்ந்த அவர்களது மகன் மாணிக்கம் யுவராசாவுக்கு நன்கொடையாக வந்தடைந்தமையினை உறுதிப்படுத்தி எமது சபையின் பண்டத்தரிப்புக் கிராம உப அலுவலக (மாதகல்) ஆதனவரிப் பதிவேட்டில் இவரது பேரனார் இளையதம்பி மாணிக்கம் பதிவு செய்யப்பட்டிருக்கும் பெயரிற்கு பதிலாக தமது பெயரை உட்புகுத்துவதற்கு விண்ணப்பித்துள்ளார். நில அளவையாளர் திரு. ஏ.பரமேஸ்வரன் அவர்களால் 06.08.2011 ஆம் திகதிய 533/2011 ஆம் இலக்கத்தில் அளந்து தயாரிக்கப்பட்ட நில அளவைப்படத்தில் நிலப்பரப்பு 1 குளி 6.20 கொண்ட லொட் 1 எனச் சுட்டப்பட்டுள்ள ஆதனமாகும். "ஆத்தி ஒல்லை" எனப்பெயர் கொண்ட இவ் ஆதனத்தின் பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் பிரசுரித்த திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும் அவ்வாறு யாரும் ஆட்சேபனைகள் ஏதும் தெரிவிக்காதவிடத்து குறித்த ஆதனமானது மாணிக்கம் யுவராசா எனும் பெயருக்கு ஆதனப் பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதனையும் இந்த ஆதன உரிமைமாற்றம் செய்வதால் எதிர்காலத்தில் ஏற்படவிருக்கும் எவ்வித குறைபாடுகள். பிரச்சினைகள் பிசகு தடைகளிற்கு வலிகாமம் தென்மேற்கு. பிரதேசசபை பொறுப்பாளி ஆக மாட்டாது என்பதனையும் அறியத்தருகின்றேன்.

**திரு.சீ.சபேசன் செயலாளர்,**
**வலிகாமம் தென் மேற்குப் பிரதேசசபை, மானிப்பாய்.** (C-6689)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகத்தில் போட்டோ பிரதி சேவையை மேற்கொள்வதற்கான கேள்விப் பத்திரம் கோரல்**

யாழ். பல்கலைக்கழக நூலகத்தில் போட்டோ பிரதி சேவையை ஒரு வருட காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் நடாத்துவதற்கு பொருத்தமான தனிநபர்களிடமிருந்து அல்லது நிறுவனங்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இப்பல்கலைக்கழக நூலகத்தில் மாணவர்களின் தினசரி விரிவுரைக் குறிப்புகள், பல்கலைக்கழக நூலகத்திலுள்ள நிரந்தர உசாத்துணை நூல்கள் என்பவற்றை நிழற்பிரதி செய்வதற்கு இச்சேவையைப் பொறுப்பேற்பவர் தயாராக இருக்க வேண்டும்.

இச்சேவையைப் பொறுப்பேற்பவர் மாதவாடகையாக ரூபா 3,000/- இனை மாதாந்தம் பல்கலைக்கழகத்திற்குச் செலுத்துவதுடன் பல்கலைக்கழகத்துடன் ஒப்பந்தம் ஒன்றிலும் கைச்சாத்திடுதல் வேண்டும்.

விரும்பிய விண்ணப்பதாரர் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 1000/- இனை பல்கலைக்கழக காசாளர் கருமபீடத்தில் அல்லது நிதியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் எனும் பெயரில், யாழ். பல்கலைக்கழக் மக்கள் வங்கியின் கணக்கிலக்கம் **97000006000276** இற்கு எந்தவொரு மக்கள் வங்கி கிளையிலும் செலுத்தி பெற்ற பற்றுச் சீட்டை 23.06.2023 மதியம் 12.00 மணிக்கு முன்னர் உதவிப்பதிவாளர், நிர்வாகம் அவர்களிடம் சமர்ப்பித்து கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

பூரணப்படுத்தப்பட்ட கேள்விப்பத்திரப் படிவங்களை 28.06.2023 பிற்பகல் 2.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாகப் பதிவுத்தபாலில் தலைவர், கேள்விச்சபை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும். நேரடியாகச் சமர்ப்பிக்க விரும்புவோர் மேற்குறித்த காலவரையறைக்குள் பதிவாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியினுள் பத்திரங்களை இடலாம். **கடித உறையின் இடது மேல் மூலையில் "பல்கலைக்கழக நூலகத்தில் போட்டோ பிரதி சேவை வழங்கல்"** என குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். கேள்விப்பத்திர விபரம் மற்றும் நிபந்தனை விபரங்களை பொது நிர்வாகக் கிளையில் உதவிப்பதிவாளரிடம் தொடர்பு கொண்டு பார்வையிடலாம்.

கேள்விப்பத்திரங்கள் 28.06.2023 பிற்பகல் 2.30 மணிக்கு திறக்கப்படும். மனுதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் ஆவணங்கள் பரிசீலிக்கப்படும் இடத்திற்கு சமுகமளிக்கலாம்.

**தலைவர்**
**கேள்விச்சபை**
**10.06.2023**

(C-6703)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 1

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 201





அம்மாளிகையின் பின்புறத்து உத்தியானவனம் மிகச் சோபிதமாக விளகியது.

அதில் வானளாவிய ஆல மரங்களும் இருந்தன. சின்னஞ்சிறு பூஞ்செடிகளும் இருந்தன. வளைந்து நெளிந்து மரங்களைத் தழுவிக் கொண்டிருந்த பூங்கொடிகளும் பூங்கொடிகளாலான கொடி வீடுகளும் இருந்தன.

குந்தவையும் அவளுடைய தோழிமார்களும் மாலை நேரங்களைப் பெரும்பாலும் அந்த உத்தியானவனத்திலேயே கழிப்பது வழக்கம்.

சில சமயம் எல்லோரும் சேர்ந்து ஓரிடத்தில் உட்கார்ந்து கொண்டு கதைகள் பேசிக் கொட்டமடிப்பார்கள்.

இன்னும் சில சமயம் இரண்டு பேராகவும் மூன்று பேராகவும் பிரிந்து சென்று அந்தரங்கம் பேசுவார்கள்.

சில நாளாகக் குந்தவையும் வானதியும் தனியே பிரிந்து சென்று பேசுவது வழக்கமாய்ப் போயிருந்தது.

அன்றைக்கு ஒரு பெரிய ஆலமரக் கிளையில் கட்டித் தொங்கவிட்டிருந்த கொடி ஊஞ்சலில் குந்தவையும் வானதியும் அமர்ந்து ஆடிக் கொண்டும் பேசிக் கொண்டுமிருந்தார்கள்.

பறவைகளின் கலகலத் தொனியுடன் போட்டியிட்டுக் கொண்டு பெண்மணிகளின் குதூகலச் சிரிப்பொலியும் அவ்வப்போது அந்த உத்தியான வனத்தில் கேட்டுக் கொண்டிருந்தது.

ஆனால் குந்தவையும் வானதியும் மட்டும் சிரிக்கவில்லை. மற்றவர்களின் சிரிப்பு அவர்களுக்கு அவ்வளவாய்ப் பிடிக்கவும் இல்லை. பேச்சுத்தான் அவர்கள் அதிகமாகப் பேசினார்களோ என்றால் அதுவும் அவ்வளவாக இல்லை.

கொடி வீடு ஒன்றிலிருந்து ஒரு பெண் கீதம் ஒன்று பாடினாள். அது கண்ணன் பிறந்த நாள் அல்லவா? அவள் பாடியதும் கண்ணனைப் பற்றிய பாடல்தான்.

வெண்ணிலாவில் வேணுகானம் கேட்கிறது. அது கண்ணனிடம் காதல் கொண்ட ஒரு பெண்ணை வேதனை செய்கிறது.

அவள் தன் வேதனையை வாய் திறந்து வெளியிடுகிறாள். மரக்கிளையிலிருந்து ஒரு கிளி அவளுக்கு ஆறுதல் சொல்லுகிறது.

பெண்:

வேதனை செய்திடும் வெண்ணிலவில் - இங்கு
வீணன் எவன் குழல் ஊதுகின்றான்?
நாதன் இலா இந்தப் பேதை தன்னை
நலிந்திடுதல் என்ன புண்ணியமோ?

கிளி:

வானமும் வையமும் இன்புறவே -ஐயன்
வாய்மடுத்தூதும் குழலிசைதான்
மானே உந்தனை வருத்திடுமோ - இந்த
மானிலம் காணாப் புதுமை அம்மா!

பெண்:

பூவையே! உந்தனைப் போற்றிடுவேன் - நல்ல
புன்னைமலர் கொய்து சூட்டிடுவேன் - எந்தன்
ஆவி குலைந்திடும் வேளையிலே - ஒரு
ஆறுதல் கூற நீ வந்தனையோ?

கிளி:

கட்டழகி! உந்தன் காதலினால் - எங்கள்
கண்ணன் படுந்துயர் சொல்ல வந்தேன் - உன்னை
விட்டுப் பிரிந்த நாள் முதலாய் - நல்ல
வெண்ணெயும் வேம்பாய்க் கசந்த தென்பான்!

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## சாமர்த்தியமான சோதிடன்



ஒரு சிற்றூரில் ஆனந்தன் என்பவன், தன் மனைவியோடும் இரண்டு குழந்தைகளோடும் வாழ்ந்து கொண்டிருந்தான்.

அவன் கைவசம் இருந்த பணமும் நகையும் செலவழிந்தது வேலை எதுவும் கிடைக்கவில்லை. சில நாட்கள் பட்டினி கிடக்கவும் நேரிட்டது.

மனைவி, மக்களோடு ஊர் ஊராக அலைந்தான் ஆனந்தன். அடுத்த ஊரில் இருக்கும் செல்வந்தன் ஆண்டான் செட்டி வீட்டுக்கு வேலை பார்க்க ஒரு பெண் தேவை என்பதை கேள்விப்பட்டான் ஆனந்தன்.

தன் மனைவியையும் குழந்தைகளையும் ஆண்டான் செட்டி வீட்டில் வேலை செய்யும்படி ஏற்பாடு செய்தான்.

சிறிது தொலைவில் உள்ள வணிகனிடம் கணக்காளனாக வேலை பார்த்து, அங்கேயே ஒரு அறையில் தங்கினான் ஆனந்தன்.

சில நாட்களுக்குப் பிறகு, ஆண்டான் செட்டி மகளுக்கு திருமணம் வெகு விமர்சையாக நடைபெற்றது.

திருமணத்திற்குச் சென்று நல்ல உணவு அருந்தலாம் என்று மிக ஆவலோடு இருந்தான் ஆனந்தன். ஆனால், அவனை அழைக்கவில்லை. சிறிது வருத்தம் உண்டாயிற்று. ஆயினும் தன் மனைவி மக்களாவது திருமண விருந்து உண்டதில் அவனுக்கு மகிழ்ச்சி அளித்தது.

அடுத்த நாள் ஆனந்தனின் மனைவி அவனைக் காண வந்தாள்.

'நாம் ஏழை என்பதால் தானே செட்டி மகள் திருமணத்திற்கு தன்னை அழைக்கவில்லை என்று மனைவியிடம் வருத்தப்பட்டான் ஆனந்தன்.

மனைவி புறப்படத் தயாரானாள். அப்பொழுது, "எனக்கு ஒரு புதுயோசனை தோன்றியுள்ளது. செக்குமாடுபோல், கணக்கு வேலை பார்த்து எப்படி முன்னேற முடியும்? ஏதேனும், ஒரு தந்திரத்தைக் கையாண்டால் தான் மதிப்போடு, பணமும் சம்பாதிக்க முடியும். செட்டி வீட்டுக்கு பலர் வருவார்கள். பேச்சுவாக்கில், என் கணவர் ஞான திருஷ்டி மூலம் சோதிடம் கூறுவர். தெய்வீக சக்தி பெற்றவர் என்று சொல்லு" என்றான். "உங்களுக்குச் சோதிடம் தெரியாதே, பொய் சொல்லலாமா?" என்றாள் அவன் மனைவி. "பொய் சொல்லி ஏமாற்ற மாட்டேன் தந்திரம்! அது ஒரு வகையான சாமர்த்தியம்" என்றான் ஆனந்தன்.

செட்டி வீட்டுக்கு ஆனந்தன் மனைவி சென்றாள். மறுநாள், செட்டி வீட்டில் ஒரே பரபரப்பு. திருமணத்திற்கு மாப்பிள்ளை வந்த குதிரை காணாமல் போய்விட்டது. எங்கே தேடியும் குதிரை போன சுவடே தெரியவில்லை.

அப்போது, "என் கணவர் தெய்வீக அருள் பெற்ற சோதிடர், காணாமல் போன குதிரையைப் பற்றி, அவரிடம் கேட்டால், ஞானதிருஷ்டிமூலம் சொல்லக் கூடியவர்" என்று செட்டியிடம் ஆனந்தன் மனைவி சொன்னாள்.

உடனே செட்டி, ஆனந்தனைத் தேடிச் சென்று வேலை மிகுதியால், திருமணத்திற்கு உங்களை அழைக்க மறந்து விட்டேன். மன்னிக்க வேண்டும் என்று கூறி, "குதிரை காணாமல் போய் விட்டது, அது கிடைக்க வழி செய்ய வேண்டும்" என்று பணிவோடு வேண்டிக் கொண்டான்.

அதைக் கேட்டதும், கரும்பலகையில், என்னவோ கணக்குப் போட்டு, கண்ணை மூடிக் கொண்டு, வாய்க்குள் முணு முணுத்து "செட்டியாரே! நேராக தெற்கே போனால், ஊருக்கு வெளியே, பாழடைந்த ஒரு சத்திரம் காணப்படும். திருடர்கள் அதில் குதிரையை மறைத்து வைத்திருப்பதாகத் தெரிகிறது" என்றான் ஆனந்தன். செட்டி சில ஆட்களோடு அந்தச் சத்திரத்திற்குச் சென்றான்.

ஆனந்தன் கூறியபடி அங்கே குதிரை மறைவாகக் கட்டப்பட்டிருந்தது. மகிழ்ச்சியோடு, அதை ஓட்டி வந்தனர்.

செட்டி அடைந்த மகிழ்ச்சிக்கு அளவில்லை. ஆனந்தனுக்கு நிறைய பணம் கொடுத்தான். அவனுடைய சோதிடத்தின் பெருமையைப் பலரிடம் சொன்னான். அவன் மதிப்பும் புகழும் ஊர் முழுதும் பரவியது.

ஆனால், குதிரையை முதல் நாள் இரவில் திருடிக் கொண்டு போய் சத்திரத்தில் கட்டி வைத்தவன் ஆனந்தனே என்பது எவருக்குமே தெரியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதைப்பழக்கத்துக்கு அடிமையாகிறவர்கள் முதுமை அடைவதேயில்லை. காரணம் இள வயதைத் தாண்டி அவர்கள் வாழ்வதேயில்லை.

– யாரோ

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## போதைவஸ்து வியாபாரிகளை ஒழிக்காமல் விட்டு விட்டு...

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சமுதாய மருத்துவத் துறையின் தலைவராக இருந்த வைத்திய கலாநிதி என்.சிவராஜா அவர்கள் ஒரு கருத்தரங்கில் கலந்து கொண்டார்.

வருமுன்னர் காக்கின்ற நோய்த் தடுப்புப் பிரிவுக்கும் நோய் வந்த பின்னர் சிகிச்சை வழங்குகின்ற மருத்துவப் பிரிவுக்குமிடையிலான வித்தியாசத்தைத் தெளிவுபடுத்துவதற்காக அவர் இக்கதையைக் கூறியிருந்தார்.

ஒரு மலை உச்சியில் ஒருவர் நின்று கொண்டு அந்த மலையில் ஏறுகின்றவர்களைத் தள்ளி விழுத்திக் கொண்டிருக்கிறார்.

மலையில் இருந்து விழுகின்றவர்கள் ஆற்றில் விழுந்து அந்தரிக்கின்றனர்.

கீழே நிற்பவர்கள் அவர்களைத் தூக்கிச் சென்று வைத்தியசாலையில் அனுமதிக்கின்றனர்.

அங்கு அவர்களுக்கு சிகிச்சை வழங்கப்படுகிறது. இதுதான் வந்த பின்னர் சிகிச்சை வழங்கும் பிரிவு.

ஆனால் மலையில் இருந்து விழுவதைத் தடுக்க வேண்டுமாயின், மலை உச்சியில் நின்று கொண்டு ஆட்களைத் தள்ளிவிழுத்துகின்றவரை அங்கிருந்து வெளியேற்ற வேண்டும்.

அவ்வாறு வெளியேற்றினால், மலையில் இருந்து விழுவது தவிர்க்கப்பட்டு விடும். இதுதான் நோய்வராமல் தடுக்கும் பிரிவு என விளக்கம் கொடுத்தார்.

ஆக, மலையில் நின்று ஆட்களைத் தள்ளி விழுத்துபவரை தடுத்தால் – அங்கிருந்து வெளியேற்றினால், வைத்தியசாலையில் சிகிச்சை பெறுபவர்களின் எண்ணிக்கையைக் கணிசமாகக் குறைக்க முடியும்.

ஆக, நோய்த் தடுப்புப் பிரிவு மிகச் சிறப்பாக இயங்கினால், சிகிச்சை வழங்குவது கணிசமாகக் குறையும்.

பல ஆண்டுகளுக்கு முன் இக்கதையைக் கூறிய மருத்துவர் என்.சிவராஜா அவர்கள் இப்போது அமரத்துவமடைந்துவிட்டார்.

ஆனால் அவர் கூறிய இக்கதை இன்றைய போதைப்பொருள் விவகாரத்தில் மிகவும் பொருத்துடையதாக அமைகிறது.

ஆம், போதைப் பாவனை உடையவர்களைக் கைது செய்கின்ற பணியை பொலிஸார் மேற்கொள்கின்றனர்.

எனினும் அவர்களின் அந்தப் பணி முடிவுக்கு வரவில்லை.

மாறாக, நாளாந்தம் போதைக்கு அடிமையானவர்களைக் கைது செய்வதும் புனர்வாழ்வு நிலையத்துக்கு அனுப்புவதுமான வேலை தொடர்ந்து கொண்டே இருக்கிறது.

இங்குதான் போதைவஸ்து கடத்தலில் – அதன் வியாபாரத்தில் ஈடுபடுவர்களைக் கைது செய்தால், அவர்களைத் திருத்தினால், போதை பாவித்ததற்காக கைது செய்வதற்கு எவருமே இருக்க மாட்டார்கள்.

ஆக, பொலிஸ் செய்ய வேண்டியதைச் செய்யாமல் விடுவதால், அருமந்த இளம் பிள்ளைகள் போதைக்கு அடிமையாகித் தங்கள் வாழ்வையும் தொலைத்து தங்கள் குடும்பத்தையும் நடுத்தெருவில் நிறுத்தி விடுகின்றனர்.

எனவே போதைவஸ்துக் கடத்தலை, வியாபாரத்தை பொலிஸார் முற்றாகத் தடுத்தால் மக்கள் சமூகம் நிம்மதியாக வாழும்.

# சுற்றறிக்கை வெளியிட வேண்டாம் தேர்தலை நடத்தினால் போதுமானது

## பிரதமரிடம் எதிர்க் கட்சித் தலைவர்

(கொழும்பு)

சுற்றறிக்கை வெளியிட வேண்டிய தேவையில்லை தேர்தலை முறையாக நடத்தினால் போதுமானது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித்பிரேமதாஸ பிரதமரிடம் தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பில் பாராளுமன்றத்தில் பிரதமரிடம் கேள்வி எழுப்பியபோதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மார்ச் 19 ஆம் திகதிக்குப் பின்னர், உள்ளூராட்சி மன்றங்களின் பதவிக் காலம் முடிவடைவதைத் தொடர்ந்து பிரதேச ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவரின் பிரதிநிதி ஒருவர், இந்த நிறுவனங்களை ஒருங்கிணைப்புச் செய்ய நியமிக்குமாறு கோரி அரசாங்கம் வெளியிட்ட சுற்றறிக்கையை மாற்றிமைத்ததில் மகிழ்ச்சியடைந்தாலும், ஆளுநரின் ஒருங்கிணைப்பாளராக அரசாங்க அதிகாரியொருவர், அபிவிருத்தி உத்தியோகத்தர் ஒருவரை நியமிப்பது தொடர்பான சுற்றறிக்கையொன்று வெளியிடப்பட்டுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

இந்த அனைத்து அதிகாரங்களையும் சட்டத்தின் பிரகாரம் செயல்படுத்த மாகாண ஆணையாளர்கள், உள்ளூராட்சிஆணையாளர்கள், மாநகர ஆணையாளர்கள், உள்ளூராட்சி மன்றங்களின் செயலாளர்கள் உள்ளதாகவும், இவற்றை நடைமுறைப்படுத்த புதியவர்கள் நியமிக்கப்பட வேண்டிய தேவை இல்லை என்றும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

முந்தைய சுற்றறிக்கையைப் போலவே, இந்த புதிய சுற்றறிக்கையும் நீதிமன்றத்தில் சவாலுக்குட்படுத்தப்படும் எனவும், இதில் பின்வாங்கப் போவதில்லை எனவும், வெவ்வேறு சந்தர்ப்பங்களில் வெவ்வேறு சுற்றறிக்கைகளை முன்வைக்காமல் அச்சமோ கூச்சமோ இன்றி, முதுகெலும்பை நேராக நிமிர்த்தி உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்தினால் இந்தக் கேள்விகளுக்கெல்லாம் மக்கள் ஆணை மூலம் பதில் கிடைக்கும் என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார். (ம-7)

# 8 ஆயிரம் பேருக்கு அடுத்தவாரம் ஆசிரியர் நியமனம் வழங்கப்படும்

## கல்வி இராஜாங்க அமைச்சர்

(கொழும்பு)

கல்வியியற் கல்லூரிகளில் இருந்து டிப்ளோமா பட்டதாரிகளாக வெளியேறிய சுமார் 8 ஆயிரம் பேருக்கு அடுத்த வாரம் ஆசிரியர் நியமனம் வழங்கப்படவுள்ளது.

இதனை கல்வி இராஜாங்க அமைச்சர் ஏ.அரவிந்தகுமார் தெரிவித்துள்ளார்.

இதனடிப் படையில், எதிர்வரும் 16ஆம் திகதி குறித்த பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்கப்படும் என இராஜாங்க அமைச்சர் தெரிவித்துள்ளார்.

மேல் மாகாணம் மற்றும் தேசிய பாடசாலைகளுக்காக தெரிவாகியுள்ள 2500 ஆசிரியர்களுக்கான நியமனம் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 16ஆம் திகதி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெறும்.

ஏனைய மாகாண பாடசாலைகளுக்கான ஆசிரியர்களது நியமனங்கள், அந்தந்த மாகாணங்களில் வழங்கப்படும் என இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டார். (ம-7)

# பொலிஸ் காவலில் சந்தேகநபர் மரணம்

## 7 பொலிஸ் அதிகாரிகள் கைது

(கொழும்பு)

பொலிஸ் தடுப்பு காவலில் வைக்கப்பட்டிருந்த ஒருவர் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் 7 பொலிஸ் அதிகாரிகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைக்கு அமைய, சம்பவத்துடன் தொடர்புடைய பொலிஸ் அதிகாரிகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் போதைப் பொருள் ஒழிப்புப் பிரிவின் 7 அதிகாரிகளே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களில் உதவி பொலிஸ் பரிசோதகர் ஒருவரும் பொலிஸ் சார்ஜன்ட் ஒருவரும்பொலிஸ் கான்ஸ்டபிள்கள் 5 பேரும் அடங்கியுள்ளனர்.

நாரஹேன்பிட்டி தொழிற்பயிற்சி நிறுவனத்தில் பணியாற்றிய ஹிக்கடுவையைச் சேர்ந்த 41 வயதுடைய ஒருவர்பொலிஸ் காவலில் வைக்கப்பட்ட பின்னர் மர்மமான முறையில் உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

# இன்சுலின் மருந்துகளுக்கு நாட்டில் தட்டுப்பாடு

(கொழும்பு)

நாட்டில் தேசிய வைத்தியசாலையின் நீரிழிவு சிகிச்சைப் பிரிவில் இன்சுலின் மருந்திற்குத் தட்டுப்பாடு நிலவுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இன்சுலின் தட்டுப்பாட்டினால் மருத்துவர்கள் இன்சுலினை வெளியில் வாங்குமாறு தெரிவிப்பதால் நோயாளிகள் மிகவும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், தேசிய வைத்தியசாலைகளின் நீரிழிவு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் நோயாளிகள் பலர் இவ்வாறு சிரமங்களை எதிர்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, நாட்டில் தற்போது குரங்கம்மை தொற்றுக் குறித்த எவ்வித அச்சுறுத்தலுமில்லை என்பதால் வைரஸ் குறித்து பொதுமக்கள் பீதியடைய வேண்டாம் என சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவின் பணிப்பாளர் வைத்தியர் சமித்த கினிகே தெரிவித்துள்ளார்.

குரங்கம்மை வைரஸ் இலங்கையில் தோன்றியதல்ல என்பதால் இது சமூகப் பரவலை ஏற்படுத்தும் என அச்சம் கொள்ளத் தேவையில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் பாதிக்கப்பட்ட நோயாளிகள் குறித்து அனைத்துவித பாதுகாப்பு நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளதால் பொதுமக்கள் குழப்பமடையத் தேவையில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-7)

# யாழில் விபத்து ஒருவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட செட்டியார் மடம் பகுதியில் நேற்றிரவு இடம்பெற்ற விபத்தில் வயோதிபர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

குறித்த வயோதிபர் மோட்டார் சைக்கிளில் வீதியால் சென்று கொண்டிருந்தவேளை அவ் வீதியால் வந்த வான் மோதி விபத்து சம்பவித்துள்ளது.

முதியவர் வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார். இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7.104)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கிளிநொச்சி கரைச்சி புளியம்பொக்கனை நாகதம்பிரான் ஆலய மணிமண்டப அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்று சமய அனுஸ்டானங்களுடன் நடைபெற்றது.

(படம்- தேவானந்தன், யதுபாஸ்கரன்)

## அச்சுவேலி விவசாயி ஒருவரால்
# வெங்காயம் நடுகை செய்யும் இயந்திரம் கண்டுபிடிப்பு





(யாழ்ப்பாணம்)

வெங்காய செய்கையினை இலகுவாக்கும் வகையில் வெங்காயம் நடுகை செய்யும் இயந்திரம் ஒன்றினை அச்சுவேலியைச் சேர்ந்த விவசாயி ஒருவர் உருவாக்கியுள்ளார்.

அச்சுவேலி பகுதியைச் சேர்ந்த விவசாயி ஒருவர் இரண்டு வருடங்களுக்கு மேலாக லாண்ட் மாஸ்டர் இயந்திரத்தை பயன்படுத்தி வெங்காயத்தை நடுகை செய்யும் இயந்திரம் ஒன்றினை உருவாக்கி அதன் மூலம் செலவினங்களை குறைத்து வெங்காயத்தினை நடுகை செய்யும் முறையினை கண்டுபிடித்துள்ளார்.

இதனூடாக வெங்காயத்தினை நடுகை செய்வதற்கு ஏற்படும் செலவீனத்தை பல மடங்கு குறைத்து அதன் ஊடாக பல ஏக்கர் நிலங்களில் வெங்காயத்தினை பயிரிட்டு வெற்றி கண்டுள்ளார்.

இதனை அனைவருக்கும் அறிமுகப்படுத்தும் வகையில் முதற்கட்டமாக வட மாகாண விவசாய பணிப்பாளரின் மேற்பார்வையின் கீழ் நேற்றைய தினம் நடுகை செய்யும் முறை காண்பிக்கப்பட்டது.

அத்துடன் குறித்த இயந்திரத்தை எவ்வாறு இயக்குவது அதன் மூலம் எப்படி நடுகையினை மேற்கொள்வது போன்ற விடயங்கள் பயனாளிகளுக்கு காண்பிக்கப்பட்டது.

குறித்த நடுகை முறை வெற்றி அளிக்கும் முறையாக விவசாய அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்டால் அதனை அனைவருக்கும் பரிந்துரைப்பதற்கு முன்வரவுள்ளனர்.(4)

# மன்னார் தேத்தாவாடி பகுதியில் சட்டவிரோத மணல் அகழ்வு
## 10 உழவு இயந்திரங்கள் 3 ஜே.சி.பி இயந்திரங்கள் மீட்பு



(மன்னார்)

மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள தேத்தாவாடி பகுதியில் சட்ட விரோதமான முறையில் மணல் அகழ்வில் ஈடுபட்டவர்கள் நேற்று முன்தினம் வியாழக்கிழமை கொழும்பில் இருந்து வருகை தந்த புவிச் சரிதவியல் சுரங்க பணியக திணைக்கள அதிகாரிகளிடம் மாட்டிக் கொண்டுள்ளனர்.

மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள தேத்தாவாடி பகுதியில் மணல் அகழ்வில் ஈடுபட்டவர்களை கொழும்பில் இருந்து வருகை தந்த புவிச்சரிதவியல் சுரங்க பணியக திணைக்கள அதிகாரிகள் மற்றும் மன்னார் மாவட்ட புவிச்சரிதவியல் சுரங்க பணியக அதிகாரிகளும் இணைந்து பார்வையிட்டனர்.

இதன் போது தேத்தாவாடி பகுதியில் சட்டவிரோதமான முறையில் மணல் அகழ்வில் ஈடுபட்டு வந்தமை தெரிய வந்துள்ளது.

குறித்த தேத்தாவாடி பகுதியில் அனுமதிப்பத்திரம் உள்ள இடங்களில் அகழப்படும் மண் களஞ்சியப்படுத்தும் இடங்களில் சட்ட விரோதமான முறையில் அகழ்வு செய்யப்பட்ட மண்ணையும் சேர்த்து களஞ்சியப்படுத்தி விற்பனை செய்யப்படுகின்றமை கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இதன் போது குறித்த பகுதியில் சட்டவிரோதமான முறையில் மணல் அகழ்வில் ஈடுபட்ட 10 உழவு இயந்திரங்கள்,3 ஜே.சி.பி இயந்திரங்களும் கைப்பற்றப்பட்டு மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக இலுப்பைக்கடவை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.மேலும் இவை அனைத்துக்குமான அனுமதிப்பத்திரங்களை தற்காலிகமாக இரத்து செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (4-285)

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை**

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பிறவுண்வீதியில் அமைந்துள்ள பயன்படுத்த முடியாத வீடு மற்றும் பொருட்களை விற்பனை செய்வதற்கான கேள்விப் பத்திரம் கோரல்**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பிறவுண் வீதியில் பல்கலைக்கழக கல்லூரிக்கு முன்பாக அமைந்துள்ள பாவனைக்குதவாத கட்டடம் மற்றும் பாவித்த கல்வனைசுத் தகரப்பெட்டிகள் என்பவற்றை விற்பனை செய்வதன் மூலம் அகற்றுவதற்கு பொருத்தமான தனி நபர்களிடமிருந்து அல்லது நிறுவனங்களிடமிருந்து கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

எனவே ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 3000.00 இனை **97000006000276** என்ற கணக்கிலக்கத்திற்கு நிதியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் எனும் பெயரில் ஏதாவதொரு மக்கள் வங்கி கிளையில் செலுத்தி பெற்ற பற்றுச்சீட்டை 23.06.2023 அன்று 3.00 மணிக்கு முன்னர் உதவிப்பதிவாளர், பொது நிர்வாகம் அவர்களிடம் சமர்ப்பித்து கேள்விப் பத்திரங்களையும் பெற்றுக் கொள்ளலாம். கட்டடம் மற்றும் பொருட்களைப் பார்வையிட விரும்பும் கேள்விதார்கள் மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்திய பற்றுச்சீட்டுடன் 021-2226516 என்ற தொலைபேசியூடாகத் தொடர்புகொண்டு பார்வையிட முடியும்.

மேலும் பூரணப்படுத்தப்பட்ட கேள்விப்பத்திரத்துடன் மீளளிப்பு செய்யப்படக்கூடிய தொகையான ரூபா.100,000.00 இனை எந்தவொரு மக்கள் வங்கி கிளையிலும் **97000440002612** என்ற கணக்கிலக்கத்திற்கு நிதியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் எனும் பெயரில் வைப்புச் செய்த பற்றுச்சீட்டினையும் இணைத்து எதிர்வரும் **30.06.2023 பிற்பகல் 2.00** மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாகப் பதிவுத்தபாலில் தலைவர், கேள்விச்சபை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும். நேரடியாகச் சமர்ப்பிக்க விரும்புவோர் மேற்குறித்த காலவரையறைக்குள் பதிவாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியினுள் கேள்விப் பத்திரங்களை இடலாம். **கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "பல்கலைக்கழக பிறவுண் வீதியில் பல்கலைக்கழக கல்லூரிக்கு முன்பாக அமைந்துள்ள பாவனைக்குதவாத கட்டடம் மற்றும் பாவித்த கல்வனைசு தகரப்பெட்டிகள் என்பவற்றுக்கான கேள்விப்பத்திரம்"** என குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும். மீளளிப்பு செய்யப்படக்கூடிய தொகையான ரூபா.100,000.00 ஐ செலுத்தாத கேள்விதாரர்களின் கேள்விகள் எக்காரணம் கொண்டும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

கேள்விப் பத்திரங்கள் 30.06.2023 பிற்பகல் 2.30 மணிக்கு திறக்கப்படும். மனுதாரர்கள் அல்லது அவர்களில் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் அன்றையதினம் ஆவணங்கள் பரிசீலிக்கப்படும் இடத்திற்கு சமுகமளிக்கலாம்.

**தலைவர், கேள்விச்சபை.** (சி-6704) 10.06.2023




| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 120 | 150 |
| உருளைக்கிழங்கு | 180 | 180 | 200 |
| பச்சைமிளகாய் | 300 | 250 | 400 |
| தக்காளி | 260 | 300 | 300 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 250 | 240 |
| கோவா | 400 | 420 | 400 |
| கரட் | 360 | 400 | 450 |
| பூசணி | 100 | 80 | 100 |
| புடோல் | 150 | 150 | 400 |
| வாழைக்காய் | 100 | 150 | 100 |
| சின்ன வெங்காயம் | 380 | 400 | 400 |
| பெரிய வெங்காயம் | 130 | 120 | 140 |
| பாகற்காய் | 450 | 500 | 600 |
| வெண்டக்காய் | 160 | 140 | 300 |
| கருணைக் கிழங்கு | 120 | 220 | 200 |
| பயற்றங்காய் | 450 | 600 | 300 |
| லீக்ஸ் | 380 | 280 | 450 |
| பீற்றூட் | 450 | 400 | 500 |
| கறிமிளகாய் | 350 | 450 | 500 |
| முருங்கைக்காய் | 1200 | 2000 | 2800 |
| போஞ்சி | 500 | 480 | 500 |
| கத்தரிதம்புள்ள | 250 | 80 | 140 |
| கீரை - 1 பிடி | 80 | 50 | 80 |
| தேசிக்காய் | 350 | 350 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 80 | 70-100 |
| இராசவள்ளி | 300 | 260 | 300 |
| வெங்காயப்பூ | 450 | 450 | 800 |
| முள்ளங்கி | 120 | 200 | 240 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 50 |
| வல்லாரை | 15 | 40 | 50 |
| ஈரப்பலா | 120 | 200 | 200 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முல்லை காட்டுப்...

சந்தேகிக்கப்படுகிறது,

இது தொடர்பில் மல்லாவி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,316)

## இலங்கை மீள்...

யான நிதி முகாமைத்துவம் மூலம் இதனைச் சாத்தியப்படுத்தலாம் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ ஆசிய அபிவிருத்தி வங்கி பிரதிநிதிகளிடம் தெரிவித்துள்ளார்.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் தெற்காசிய திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் கெனிச்சி யோகோயாமா உள்ளிட்ட குழுவினர் நேற்று கொழும்பிலுள்ள எதிர்க் கட்சித் தலைவர் அலுவலகத்தில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவைச் சந்தித்து கலந்துரையாடினர்.

இலங்கை தற்போது முகம்கொடுத்து வரும் நிலைமைகள் தொடர்பில் இங்கு விரிவாக கலந்துரையாடப்பட்டதோடு, இலங்கையைக் கட்டியெழுப்புவதற்குத் தேவையான ஒத்துழைப்பை நல்குமாறு எதிர்க்கட்சித் தலைவர் தூதுக்குழுவிடம் கோரிக்கை விடுத்தார். (ம-7)

## யாழ். - கிளி...

குறித்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

1985ஆம் ஆண்டிற்கு முற்பட்ட காலத்தில் மக்கள் குடியிருப்புகளாகவும் விவசாய நிலங்களாகவும் விளங்கிய பிரதேசங்கள் வனவளப் பாதுகாப்பு மற்றும் வனஜீவராசிகள் திணைக்களங்களினால் அடையாளப்படுத்தப்பட்டிருப்பின் அவை அனைத்தும் விடுவிக்கப்பட வேண்டும் என்ற ஜனாதிபதியின் நிலைப்பாட்டினை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சுட்டிக்காட்டியதுடன், அடையாளப்படுத்தப்பட்ட காணிகளில் கணிசமானவை விவசாய நிலங்களாகவும் குடியிருப்புக்களாகவும் இருந்தமைக்கான ஆவண ரீதியான ஆதாரங்களும் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களுக்கான அதிகாரிகளினால் சமர்ப்பிக்கப்பட்டன.

இந்நிலையில், வனப் பகுதிகளும் வனஜீவராசிகளும் பாதுகாக்கப்பட வேண்டியது அவசியமாக இருக்கின்ற போதிலும், விவசாயம் மற்றும் நீர் வேளாண்மை உற்பத்தியின் அவசியம் கருதியும் மக்களின் அபிலாசைகளை கருத்தில் கொண்டும், கணிசமானளவு காணிகளை விடுவிப்பதற்கான நடவடிக்கை விரைவில் ஆரம்பிக்கப்படும் என்றும் அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்துள்ளார். (ம-7)

## வீரமாகாளி...

தின் தடைப்பட்ட மகோற்சவத்தினை உடன் ஆரம்பிக்குமாறு யாழ்.நீதவான் நீதிமன்றம் கட்டளை வழங்கியுள்ளது.

யாழ்ப்பாணம் அருள்மிகு ஸ்ரீ வீரமாகாளி அம்மன் தேவஸ்தானத்தில் பூசகர்களிடையே இடம்பெற்ற முரண்பாடு காரணமாக நேற்றுக்காலை 10 மணியளவில் ஆலயத்தின் மகோற்சவம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாக இருந்த நிலையில் தடைப்பட்டிருந்தது.

குறித்த ஆலயத்தில் 3 குடும்பங்களைச் சேர்ந்த பூசகர்களிடையே நீண்டகாலமாக முரண்பாடு காணப்பட்ட நிலையில் இவ் வருடத்திற்கான மகோற்சவத்தினை யார் முன்நின்று நடத்துவதென இரண்டு பூசகர்களிடையே முரண்பாடு ஏற்பட்டிருந்தது.

இந் நிலையில் இவ்வருட மகோற்சவத்தினை சிவதர்சக் குருக்கள் தலைமையில் நடத்துமாறு கடந்த 6ஆம் திகதி யாழ்.மாவட்ட நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்திருந்தது.

எனினும் நேற்று முன்தினம் மகோற்சவ முன்னேற்பாட்டினை மேற்கொள்ள முயன்றபோது மற்றைய பூசகர் ஆலயத் திறப்பினை கையளிக்காததால் முரண்பாடு நிலவியது.

யாழ்ப்பாணப்பொலிஸாரால் குறித்த சம்பவம் தொடர்பில் நீதவான் நீதிமன்றில் நேற்று வழக்கு தாக்கல் செய்யப்பட்டு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

நீண்டநேர வாதப்பிரதி வாதங்களின் பின் ஆலய மகோற்சவத்தினை சிவதர்சக் குருக்கள் தலைமையில் தடையின்றி நடத்துமாறும், உற்சவத்தினை குழப்புபவர்களை கைதுசெய்து நீதிமன்றில் முற்படுத்துமாறும் நீதவானால் பொலிஸாருக்கு உத்தரவிடப்பட்டது.

இதனடிப்படையில் நேற்று மாலை 5 மணிக்கு ஆலயத்தின் தடைப்பட்ட மகோற்சவம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. (ம-7,33,104)

## வெள்ளி...

பாடசாலை கல்விக்கு மேலதிகமாக வாரத்தில் ஏழு நாட்களும் ஓய்வின்றிக் கல்விச் செயற்பாட்டில் ஈடுபடுவதனால் மாணவர்களுக்கும் சமுதாயத்திற்கும் ஏற்படும் சாதக மற்றும் பாதக விளைவுகளும் எதிர்காலத்தில் எடுக்கப்பட வேண்டிய தீர்மானங்களும் தொடர்பாக தனியார் கல்வி நிலையங்களுக்கான கலந்துரையாடல் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தின் ஏற்பாட்டில் மாவட்ட அரச அதிபர் அ.சிவபாலசுந்தரனின் தலைமையில் நேற்றுக் காலை 09 மணி தொடக்கம் ஒரு மணிவரை நடைபெற்ற இக் கலந்துரையாடலில் சுகாதாரம், கல்வி அதிகாரிகள், மதத் தலைவர்கள், பொலிஸ் அதிகாரிகள், தனியார் கல்வி நிலைய தலைவர்கள், பெற்றோர் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

இக்கலந்துரையாடல் நிறைவில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள்,

1. பெற்றோருக்கு முதலில் விழிப்புணர்வு கருத்தமர்வுகளை தனியார் கல்வி நிலையங்களையும் இணைத்து மேற்கொள்ளப்பட வேண்டும். இதற்கு பிரதேச செயலக மட்டங்களில் பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

2. ஜூலை மாதம் முதலாம் திகதி முதல் தரம் 9 வரையான மாணவர்களுக்கான பிரத்தியேக கல்வி நடவடிக்கை முற்றுமுழுதாக ஞாயிற்றுக் கிழமையும் வெள்ளிக்கிழமைமாலையும் நிறுத்தப்பட வேண்டும்.

3. தனியார் கல்வி நிலையங்கள் சுகாதார வசதி, வகுப்பறை பிரமாணம் கட்டடங்கள் போன்றவற்றுக்கமைய அமைந்திருக்க வேண்டும்.

4. தனியார் கல்வி நிலையங்கள் உள்ளூராட்சி நிறுவனம், பிரதேச செயலகத்தில் பதிவு செய்தல் கட்டாயமாகும்.

5. தனியார் கல்வி நிலையங்கள் 15 தொடக்கம் 30 நிமிடம் வரை ஆன்மீகம், சமூகம் சம்பந்தப்பட்ட விடயங்களை போதிக்க வேண்டும்.

6. இந்த செயற்பாடுகள் ஒழுங்காக நடைபெறுவதை அவதானித்து பிரதேச மட்டத்திலும், மாவட்ட மட்டத்திலும் குழு உருவாக்கப்படவுள்ளது.

இத் தீர்மானங்களை பின்பற்றாத தனியார் கல்வி நிலையங்களுக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என யாழ்ப்பாண மாவட்ட அரச அதிபர் அ.சிவபாலசுந்தரன் தெரிவித்தார். (ம-7,33,104)

## நல்லிணக்கத்தை...

மற்போனோர் தொடர்பான அலுவலகத்தை மிகவும் திறம்பட செயற்படுத்துதல், அதன் டிஜிட்டல் மயமாக்கல் செயற்பாடுகளை நிறைவு செய்தல் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

இக்கலந்துரையாடலில், காணி பிரச்சினைகளை தீர்ப்பதற்கான பொறிமுறைமை தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டதுடன், இடம்பெயர்ந்தவர்களின் மீள்குடியேற்றம், அரச துறையினரால் பயன்படுத்தப்படும் தனியார் காணிகளை விடுவித்தல் மற்றும் மகாவலி காணி தொடர்பான பிரச்சினைகளுக்கு உடனடி தீர்வு காண நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தினார். (ம-7)


தன நிதானய
திகதி - 2023.06.09
சீட்டிழுப்பு இலக்கம் - 1170
G 21 45 65 66

கொவிசெத
திகதி 2023.06.09 சீட்டிழுப்பு இலக்கம் 3382
F 01 06 40 73
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 09/06/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1488
V 04 27 39 44 65

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.06.09
சீட்டிழுப்பு இலக்கம் 449
மகரம் 06 14 16 38 மகரம்

மஹஜன சம்பத
திகதி 2023/06/09
சீட்டிழுப்பு இலக்கம் 5140
T 7 7 1 2 7 1

ஜாதிக சம்பத
திகதி 2023.06.09
சீட்டிழுப்பு இலக்கம் 1595
துலாம் 8 2 2 1 1 9
லக்சபதி அதிஷ்ட இலக்கம் 5 0 4 4 3
தெலக்ஷபத அதிஷ்ட இலக்கம்
0 7 2 9 3 1 9
1 0 9 6 7 0 0
1 1 0 4 1 9 5
1 1 0 4 8 7 4
0 5 0 8 4 0 3

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2114 நிறம் இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 2023.06.09 தினம் வெள்ளிக்கிழமை
Y 15 25 27 54
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,672,720/-

சனிதா
வெள்ளிக்கிழமை சீட்டிழுப்பு திகதி: 2023.06.09 வெற்றி வாரம்: 4275 வர்ணம்: செமஞ்சள்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 49,560,050.10
10 12 28 36 A

சசிரி
வெற்றி வாரம் 334 சீட்டிழுப்பு திகதி 2023.06.09 பச்சை
28 37 40
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,007,260/-

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 2,000,000/-
06 17 38 47
திகதி 2023-06-09 வெற்றி வாரம் 3826 வர்ணம் கரும் நீலம்
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 10,302,400/-

K 22 27 38 44 63
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 336,442,611.00
1290 ஊதா 2023.06.09 வெள்ளி

அத கோடிபதி ADA KOTIPATHI
வெள்ளிக்கிழமை வெற்றி வாரம்: 1940 வர்ணம்: ஊதா சீட்டிழுப்பு திகதி: 2023.06.09
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ.51,635,138.20
49 65 66 70 U


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2025 A/L
## SMART SCIENCE CENTRE
Neravijadi brown road jaffna.

பௌதிகவியல்
**By - T.K.Kajan**

உயிரியல்
**By - S.Thavaraj**

இரசாயனவியல்
**By - T.Sharangan**

இணைந்த கணிதம்
**By - T.S.Rankan**

(15812)

**077 653 1177**

---

## கவு...
தொடர்ந்து அதி காலை 4.30 மணி முதல் நேர்த்திக் கடாய்கள் மற்றும் சேவல்கள் நரசிங்க வைரவருக்கு காணிக்கையாக் கப்படவுள்ளது. அனைத்து காணிக்கைகளும் சுகாதார நடைமுறையின் கீழ் இடம் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ம-7)

---

## உடனடி வேலைவாய்ப்பு
### சமையல் உதவியாளர்கள்
வல்வெட்டித்துறையில் இயங்கும் உணவகத்திற்கு தங்கியிருந்து சமையல் செய்யக்கூடியவர்கள் தேவை.

WE ARE HIRING!

- முன்அனுபவம் விரும்பத்தக்கது.
- ஆர்வம் உள்ளவர்களும் விண்ணப்பிக்கலாம்.

**சம்பளம்: 50,000**

(C-6710)

CIMS 49A, CHAPEL STREET, JAFFNA
**777-068-777**

---

## வேலையாட்கள் தேவை
யாழ் நகரில் இயங்கும் ஹாட்வெயார் கடைக்கு அனுபவம் உள்ள பணியாளர்கள் தேவை.

(15905)

**077 252 3155**

---

## VISA விண்ணப்பங்கள்
அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள்,ஆலோசனைகள்

- ✓ ONLINE APPLICATIONS
- ✓ VISA APPOINTMENTS
- ✓ PASSPORT APPLICATION
- ✓ POLICE CLEARANCE

என அனைத்து விதமான விசா ஏற்பாடுகளும் செய்து தரப்படும்.

VISA
• STUDENT VISA • TOURIST VISA
• SPOUSE VISA • SUPER VISA
கனடா ஐரோப்பா ஜெர்மனி பிரான்ஸ் லண்டன் சுவிஸ் அமெரிக்கா

Visa Extension வெளிநாட்டு Passport
இலங்கை விசா நீட்டித்து தரப்படும்

(C-6710)

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A,சப்பல் லேன், யாழ்ப்பாணம். | V2 TRAVELS
**0777-068-777**

---

## மணமகள் தேவை
யாழ்.இந்து உயர் கௌரவ குடும்பம் 1980 ஆம் ஆண்டு சதய நட்சத்திரத்தில் பிறந்த சகல வசதிகளுடைய Account Assistant ஆக பணிபுரியும் மணமகனுக்கு மணமகள் தேவை.

தொடர்பு

(15910)

**077 367 1062**

---

## மணமகள் தேவை
1981 இல் பிறந்த யாழ். இந்து கௌரவ குடும்ப கார்த்திகை நட்சத்திரம் 4 ஆம் பாதமுடைய மணமகனுக்கு மணமகள் தேவை. கல்வித்தகைமை B.SC in Jaffna, M.Sc in London, Pr London தொழில் - Business விவாகரத்துப் பெற்றவர் எதிர்பார்ப்பு A/L பூர்த்தி செய்த மணமகள்.

(15886)

**077 110 7624**
**078 303 5181** (Whatsapp, viber)

---

## காணி விற்பனைக்கு
யாழ்ப்பாணம் குருநகர் பொலிஸ் நிலையத்திற்கு அருகாமையில் 5 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. முழுமையாகவோ அல்லது பிரித்தும் கொடுக்கப்படும் குருநகர் பாசையூர் பிரதான வீதிக்கு அருகாமையில்

**077 653 1980**
**077 192 2010**

(15858)

---

## SB TRAVELS & TOURS (PVT) LTD
Vacant Wanted
வேலைக்கு ஆட்கள் தேவை
Airline Ticketing
அனுபவம் உள்ளவர் விரும்பத்தக்கது (Sabre system)
அனுபவம் இல்லாதவர்களுக்கு பயிற்சி வழங்கப்படும்.

Contact no : 077 108 3481
Tel : 021 222 8555
Address : 198, Kasthuriyar Road, Jaffna.
Email : sbtravels99@yahoo.com

(C-6702)

---

## TECHNO WORLD
### தொழில்நுட்ப கல்லூரி
வெலிங்டன் சந்தி, லிங்கம் கூல்பார் அருகாமை, யாழ்.

**A/L** புதிய கல்வியாண்டு **2025**

தொழில்நுட்ப பிரிவு
- திகதி 11.06.2023 (ஞாயிற்றுக்கிழமை)
- நேரம் : காலை 8.30

(C-6707)

(தேசிய, மாவட்ட ரீதியில் 5 ஆவது முறையாகவும் 98 மாணவர்கள் பல்கலைக்கழக தெரிவு)

**077 017 5346**

---

## IELTS
Academic | General | UKVI

#Student VISA மூலம் வெளிநாடு செல்வோருக்கானது
# Unique Test Tips
# 40 hrs with free 4 mock exam
# Latest course Material (Book 17)

நேரடி , zoom வகுப்புக்களாக

**A1** IELTS Life Skills — திருமணம் செய்து UK செல்வோருக்கானது
**B1** Skilled Worker Visa — மூலம் வெளிநாடு செல்வோருக்கானது

DMI , British Council இன் அங்கீகரிக்கப்பட்ட பரீட்சை பதிவு மையமாகும்

புதிய பிரிவு ஆரம்பம் 12/6/2023-Mon,15/6/2023-Thu-9 am or 3 pm

யாழில் ஆங்கிலக்கல்விக்கு No.1 பயிற்சி மையம்
DIPLOMA IN ENGLISH
SPOKEN ENGLISH

DMI COMPUTER EDUCATION 0777 17 35 17

(C-6709)

DMI COMPUTER EDUCATION
யாழ்ப்பாணம் 0777 24 07 07 021 222 4403

| சுன்னியடி | டவுணக்கேரேறி | சுன்னாகம் | சண்டிலிப்பாய் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| 021 226 2470 | 021 227 0775 | 021 224 1970 | 021 225 6665 | 021 228 5655 |
| 0777577333 | 0777227074 | 0776032300 | 0761354503 | 0776398096 |

---

## யா/ வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை
### அபிவிருத்திச் சங்க வருடாந்தப் பொதுக்கூட்டம்
யா/ வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை அபிவிருத்திச் சங்க வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 25.06.2023(ஞாயிற்றுக்கிழமை) முற்பகல் 10.00 மணியளவில் செல்வா கலையரங்கில் நடைபெறவுள்ளது.எனவே சகல பெற்றோரும் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

திருமதி இ.முத்துக்குமாரன்(அதிபர்)
தலைவர்
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்
யா/ வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை

(C-6704)

---

## காணி விற்பனைக்கு
யாழ்ப்பாணம் கல்வியங்காட்டில் 15 பரப்பு காணி விற்பனைக்கு
- கல்வியங்காட்டு சந்தியில் இருந்து 1 ½ km தூரத்தில் பருத்தித்துறை வீதியில் இருந்து 1200m தூரம் (இலங்கை நாயகி அம்மன் கோயில் முன் வீதி
- கல்வியங்காடு புதிய செம்மணி வீதியில் மடத்தடியில்
- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன்
- குடியிருப்புகள் சூழ உள்ள காணி

(15908)

**076 739 0413**
**076 436 5814**

---

யாழ். நகரில் மிக நீண்ட கால அனுபவம் கொண்ட ஆசிரியர்களின் ஒருங்கிணைவில்...

## NAVALAR
### COLLEGE OF ARTS & COMMERCE
பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி.

**A/L 2025**
கலை, வர்த்தகப்பிரிவு

ஆரம்பம் : 11.06.2023
ஞாயிறு காலை 9.00 மணி

(15895)

தொடர்பு : 076 909 3283

---

"கல்வியுலகின் கலங்கரை விளக்கு"

## NEC
மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்

யாழ் நகரில் அனுபவம் மிக்க விசேட ஆசிரியர் குழாமின் வழிகாட்டலில்...

**A/L 2025** கலை வர்த்தகம்

ஆரம்பம் : 11.06.2023 ஞாயிறு
காலை 9.00 மணி

A/L 2023, A/L 2024
DAY CLASS
புதிய பிரிவுகள் நடைபெறுகின்றன

(15895)

தொடர்பு : 076 909 3283

---

Smart thinking leads to innovate

# TECHNA Technical Institute
A/L தொழினுட்பப்பிரிவு

077 170 3549 | வீரசிங்கம் மண்டபம், 3ஆம் மாடி, யாழ்ப்பாணம்.

## புதிய பிரிவு ஆரம்பம்
**A/L 2025**
11.06.2023
(ஞாயிற்றுக்கிழமை)
காலை 8.00 மணிக்கு

(15777)

மாணவர்கள் TECHNAவை ஏன் தெரிவு செய்கின்றீர்கள்!
- மாணவர்கள் மீது தனிப்பட்ட கவனிப்பு
- தொடர்ச்சியாக வகுப்புக்கள் நடைபெறும்.
- மாதாந்தப் பரீட்சை, அலகுப் பரீட்சை, தவணைப்பரீட்சைகள்
- புள்ளிகளுக்கேற்ப Z.SCORE மூலமான தரப்படுத்தல்
- ஒவ்வொரு பாடங்களுக்கான கையேடுகள் வழங்கப்படும்.
- அனுபவம்மிக்க ஆசிரியர்களின் வழிகாட்டல்
- செயன்முறை பயிற்சி வகுப்புக்கள்
- களப்பயணங்களை மேற்கொள்ளல்
- [illegible]

எமது ஆசிரியர் குழாம்

| | |
|---|---|
| உயிர் முறைமைகள் தொழினுட்பவியல் | M.விஷ்ணுதேவன் |
| பொறியியல் தொழினுட்பவியல் | S.மயூரதன் |
| தொழினுட்பவியலுக்கான விஞ்ஞானம் | S.சக்தி |
| ICT | T.லவன் |
| விவசாய விஞ்ஞானம் | S.சஜீபன் |
| கணிதம் | T.சசிகரன் |
| புவியியல் | S.P.கரன் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தினரால் [illegible] முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 10.06.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.